வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 06.07.2023 வியாழக்கிழமை | இதழ் : 209 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## பெற்றோர் முன் யுவதி நேற்று வெட்டி கொலை!

கொழும்பு, ஜூலை 06

யுவதி ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம், அத்தனகல்லை பிரதேசத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

21 வயதுடைய எஸ். ஜே.ரோஹிணி என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி வீட்டில் தந்தை, தாய் ஆகியோருடன் நின்ற வேளை மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கிய இருவர் வீட்டுக்குள்

15

# மத சுதந்திரத்துக்கு குந்தகம் விளைவிப்பதை தடுக்க சட்டம்

## விரைவில் வருகின்றது என்கிறார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க



கொழும்பு, ஜூலை 06

**மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிராக புதிய சட்டம் கொண்டு வரப்படும் என புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**

பேச்சுச் சுதந்திரம் அல்லது மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் அவமதிக்க யாருக்கும் உரிமை இல்லை என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நமக்கே உரிய கலாசாரம் மற்றும் உணவு முறைகளில் இருந்து விலகிய தன் காரணமாக நாம் நோய்வாய்ப்பட்ட தேசமாக

15

## வீதியோரம் நின்ற சிறுவனை மோதிவிட்டு தப்பியது வாகனம்!

### ஸ்தலத்திலேயே சிறுவன் பலி!!

கிளிநொச்சி ஜூலை 06

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடி பகுதியில் ஏ-9 வீதியை கடப்பதற்காக, சைக்கிளில் வீதியோரமாக நின்று கொண்டிருந்த சிறுவனை யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக பயணித்த கெப் ரக வாகனம் ஒன்று மோதித் தள்ளியதில் அவன் சம்பவ இடத்திலேயே பலியானார்.

சம்பவத்தில் இறந்தவர் பளை முல்லையடியைச் சேர்ந்த ராஜபாஸ்கரன் ஐதுர்சிகன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய கெப் ரக வாகனம் தப்பி சென்றுள்ளதாகவும் பளை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## அரசியல் கைதிகள் விடயத்தில் அநீதியான சட்டம்தான் உள்ளது

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



கொழும்பு, ஜூலை 06

அரசியல் கைதிகள் விவகாரத்தில் அநீதியான சட்டமே எமது நாட்டில் பின்பற்றப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாது செய்ய வேண்டும் என்று கடந்த அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்போது 19 பேர் இந்தச் சட்டத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள்.

15

## இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் செப்ரெம்பரில் ஆரம்பம்

### அமைச்சர் பந்துல நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 06

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பெருமளவிலான வேலைத் திட்டங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என நம்புவதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று காலை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

கடந்த வருடம் நாடு திவால் நிலைக்கு சென்றதால் அனைத்து வெளிநாட்டு நிதியுதவிகளும் நிறுத்தப்பட்டு பல்வேறு துறைகளில் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் காரணமாக பொருளாதாரம் படிப்படியாக

15

## தலைகீழாக நின்றும் ரணில் அரசுக்கு மக்களின் ஆதரவு குறைந்த மட்டத்தில்!

### ஆய்வில் வெளியானது தகவல்

கொழும்பு, ஜூலை 06

தற்போதைய அரசாங்கத்தின் மீதான மக்களின் அங்கீகாரம் அதிகரித்துள்ளதாக சுயாதீன ஆய்வு நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மற்றும் இந்த ஆண்டு பெப்ரவரி மாதங்களுடன் ஒப்பிடுகையில், ஜூன் மாதத்தில் தற்போதைய அரசாங்கத்தின் மக்கள் அங்கீகாரம் இரட்டிப்பாகியுள்ளதாக அந்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும், அந்த அதிகரிப்பின் பின்னரும் அரசாங்கத்துக்கான அங்கீகாரம் வெறும் 21 சதவீதமாகவே உள்ளது. ‘வெறிற்றே றிசேர்ச்’ நடத்திய கடந்த ஜூன் மாத ‘நாடு என்ன நினைக்கிறது’ என்ற கருத்துக்கணிப்பிலேயே இந்த முடிவுகள் கிடைத்துள்ளன.

கடந்த ஆண்டு

15

## 11 இலட்சம் வழக்குகள் நிலுவையில்!

## 3இல் ஒரு பங்கு சிறுவர், பெண் துஷ்பிரயோகங்கள் சார்ந்தவை!!



கொழும்பு, ஜூலை 06

நாடளாவிய ரீதியில் உள்ள நீதிமன்றங்களில் ஒட்டுமொத்தமாக 11 இலட்சத்து 27 ஆயிரத்து 625 வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், குற்றவியல் மேல் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளில் மூன்றில் ஒரு பகுதி சிறுவர் மற்றும் பெண் துஷ்பிரயோக குற்றச்சாட்டு வழக்குகளாகும்.

இலங்கையர் என்ற ரீதியில்

15

# ஜனாதிபதியின் பதவியை நீடிக்க எந்தவொரு திட்டமும் கிடையாது

## அமைச்சரவை பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூலை 06

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பதவி காலத்தை பாராளுமன்றம் ஊடாக நீடித்துக்கொள்வதற்கு எந்தவொரு திட்டமும் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, ”ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 12 வருடங்களாவது அப்பதவியில் இருக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுவருகின்றது. தேர்தல் நடத்துவதற்கு தற்போது நிதியும் இல்லை. எனவே, நாடாளுமன்றத்தில் விசேட சட்டம் ஒன்றை இயற்றியாவது, ஜனாதிபதிக்கு இன்னுமொரு தவணைக்காலம் வழங்கும் திட்டம் உள்ளதா” என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அவ்வாறு எந்தவொரு திட்டமும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் பதிலளித்தார். (அ)

# முத்துராஜா இனிமேல் இலங்கைக்கு வராது!

## தாய்லாந்து அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 06

இலங்கையில் இருந்து அழைத்துச்செல்லப்பட்ட முத்துராஜா என்ற யானை தாய்லாந்து மன்னரின் ஆதரவில் இருப்பதால் இலங்கைக்கு மீளவும் திரும்பாது என அந்நாட்டு இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் வரவுட் சில்பா - ஆர்ச்சா தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தாய்லாந்து வந்தடைந்த முத்துராஜா, இலங்கையில் 22 வருடங்கள் வாழ்ந்த போதிலும் தனது புதிய சூழலை விரைவில் அறிந்துகொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

முத்துராஜா இப்போது மன்னரின் ஆதரவில் இருக்கின்றது. தற்போது லம்பாங் மாகாணத்தின் ஹாங் சாட் மாவட்டத்தில் உள்ள யானைகள் பாதுகாப்பு மையத்தில் 30 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

யானை நல்ல மனநிலையில், தலையை அசைத்து, உணவை இரசித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. முத்துராஜாவுக்கு வலது கண்ணில் கண்புரை, அதன் முன் இடது கால் வளைக்க முடியாதது, இடுப்பில் காயம் ஏற்பட்டு நகங்கள் மற்றும் நான்கு கால் பாதங்களிலும் பிரச்னை உள்ளதாக முதல்கட்ட பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு தாய்லாந்து யானைகள் தொடர்பிலும் வரவுட் இதன்போது கருத்து வெளியிட்டுள்ளார்.

அவைகளில் ஒன்றுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும், இலங்கை அவைகளை கவனித்துக் கொள்ளும் திறன் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. அவைகள் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகத் தெரிகிறது.

இலங்கையில் உள்ள சில பல்கலைக்கழகங்கள் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டு தாய்லாந்து யானைகளைப் பராமரிப்பதற்குத் தங்களுக்குத் திறன்கள் இருப்பதாகக் கூறியுள்ளனர்- என்றார். (அ)

# 11,27,625 வழக்குகள் நிலுவையில் உள்ளன

கொழும்பு, ஜூலை 06

இலங்கையில் உள்ள நீதிமன்றங்களில் 11,27,625 வழக்குகள் நிலுவையில் உள்ளன

குற்றவியல் மேல் நீதிமன்றங்களில் 5,550 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளும், பெண் துஷ்பிரயோக வழக்குகள் 4,312 உம் நிலுவையில் உள்ளன என்று நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற “நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்“ தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்ட புள்ளி விவரத்தை அவர் வெளியிட்டார்.



# முல்லைத்தீவில் கரும்புலிகள் தினம்

முல்லைத்தீவு, ஜூலை 06

முல்லைத்தீவில் தேவிபுரம் பகுதியில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் கரும்புலிகள் நாள் சிறப்புற நடைபெற்றுள்ளது.

பொது இடங்களில் வைத்து கரும்புலிகள் நாளை நினைவில் கொள்வதற்கு பொலிஸார், புலானாய்வாளர்கள் தடைவிதித்துள்ள நிலையில் தாயக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் முல்லை ஈசனின் இல்லத்தில் சிறப்பாக சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட இடத்தில் கரும்புலிகளை மக்கள் நினைவு கூர்ந்தனர். (அ)

# நடாஷா பிணையில் விடுதலை

கொழும்பு, ஜூலை 06

பௌத்த மதம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதற்காக கைது செய்யப்பட்ட நகைச்சுவை நடிகை நடாஷா எதிரிசூரியவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

எதிரிசூரிய சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று பிற்பகல் கொழும்பு மேல் நீதிமன்ற ஆதித்ய பட்டபெந்தி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிசூரியவுக்கு பிணை வழங்குவதற்கு எதிராக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து, நடாஷாவை பிணை நிபந்தனைகளுடன் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

எவ்வாறாயினும், எதிரிசூரியவை நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, அவரை எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

கொழும்பில் உள்ள முன்னணி பாடசாலை ஒன்றில் அண்மையில் நடைபெற்ற நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்றின் போது மதங்களை இழிவுபடுத்தியதாக தெரிவித்து நடாஷாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. (அ)

# ஜனாதிபதி-சபாநாயகர் இடையில் முரண்பாடா?

## சபையில் எதிர்க்கட்சி கேள்வி

கொழும்பு, ஜூலை 06

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். ஆனால் அதற்கு எதிராகவே சபாநாயகரின் நடவடிக்கை அமைந்துள்ளது. அதனால் ஜனாதிபதிக்கும் உங்களுக்கும் இடையில் ஏதாவது முரண்பாடு இருக்கிறதா என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றம் நேற்று புதன்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கையாக சபாநாயகரின் அறிவிப்பு இடம்பெற்றது.

அதில், பாராளுமன்ற குழுக்களில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர், ஆளும் கட்சி பிரதம கொறடா, சபை முதல்வர், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோருக்கு வழகங்கப்பட்டிருக்கும் வரப்பிரசாதங்களுக்கு அமைய அதன் தலைவர்களிடம் கேட்டு அறிந்துகொள்ளும் உரிமை இருக்கிறது. ஆனால் அவர்கள் அந்த குழுக்களுக்கு செல்வது உகந்தது அல்ல என தெரிவித்தார்.

இதன்போது லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. ஒழுங்கு பிரச்னை ஒன்றை எழுப்பி குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

அதன் பிரகாரமே எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்க நிதிக்குழுவுக்குச் சென்றார். அதற்கு அரச நிதிக்குழுவின் தலைவரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது உங்களது தீர்மானத்தின் பிரகாரம் நாட்டை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதியின் அழைப்புக்கு முரணாகவே அமைந்துள்ளது.

அதனால் ஜனாதிபதிக்கும் உங்களுக்குமிடையில் மோதல் ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. ஏனெனில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுக்கும்போது அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கே எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்க நிதிக்குழுவுக்கு சென்றார்.

ஆனால் தற்போது அந்த நடவடிக்கையை நிறுத்தும் வகையில் நீங்கள் செயற்படுவதாக இருந்தால், நீங்கள் ஜனாதிபதிக்கு எதிராக செயற்படுபவராக இருக்கவேண்டும் - என்றார்.

அதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், எனது அறிவிப்பில் அவ்வாறு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அறிக்கையை முறையாக வாசித்து பாருங்கள் - என்றார். (அ)

# இந்திய மீனவர்கள் 22 பேர் நிபந்தனையுடன் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 06

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 22 இந்திய மீனவர்களில் 21 பேர் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் மீனவர்கள் 22 பேரும் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத கால சிறைத்தண்டனை எனும் நிபந்தனையின் கீழ் 21 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

22 ஆவது சந்தேகநபர் 16 வயதுடையவர் என்பதனால், அவரது எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்டு, நீதிமன்றம் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்யாமல் விடுவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர் 10 ஆயிரம் ரூபா நன்னடத்தைப் பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளார்.

இலங்கை கடற்பரப்பில் இழுவைமடி பயன்பாடு, கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி இலங்கை கடலில் தொழிலில் ஈடுபட்டமை மற்றும் கடற்படையினர் தடுத்து நிறுத்தும் வரை தொடர்ச்சியாக மீன்பிடியில் ஈடுபட்டமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் இந்திய மீனவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை என்ற அடிப்படையில், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட நான்கு படகுகளில் இரு படகுகளை அரசுடைமையாக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மற்றைய இரு படகுகளுக்கான உரிமையாளர் இல்லாமையால், படகு உரிமை கோரிக்கை வழக்கு விசாரணையை செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை மிரிஹான இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பி, இந்தியாவிற்கு அனுப்பும் நடவடிக்கை எடுக்குமாறும் ஊர்காவற்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார். இலங்கை கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டபோது, கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி இந்திய மீனவர்கள் 22 பேரும் கைது செய்யப்பட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.07.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசாங்கத்தின் நல்லிணக்கம்

குருந்தூர் மலையில் நீதிபதி முன்னிலையிலேயே பௌத்த பிக்குகள் வழிபாடுகளில் ஈடுபட்டிருக்கின்றனர். சரத் வீரசேகர தலைமையிலேயே குறித்த பௌத்த பிக்குகள் குழு சென்றிருக்கின்றது. சரத் வீரசேகர தொடர்ந்தும் இனமுறுகல்களை தூண்டும் வகையில் செயல்பட்டு வருகின்றார். சரத் வீரசேகர போன்றவர்களின் பிரச்னை ஒன்றுதான் - அதாவது, அடுத்த தேர்தலில் எவ்வாறு வெற்றிபெறுவது சரத் வீரசேகர போன்றவர்களிடம் நாட்டு மக்களுக்கு சொல்வதற்கு திட்டங்கள் இல்லை. இனவாதம் மட்டும்தான் அவர்களிடம் உண்டு. ராஜபக்ஷவின் வீழ்ச்சியை தொடர்ந்து, தெற்கில் செல்லாக்காசாகிப்போன சரத் வீரசேகர போன்றவர்கள் வடக்கில் பௌத்தத்துக்கு ஆபத்தென்னும் பூச்சாண்டியை காண்பித்து தென்னிலங்கையில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற முயற்சிக்கின்றனர்.

இது தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் அமைதி காப்பதுதான் பிரச்னையானது. ஏனெனில், இவ்வாறான செயல்பாடுகள் தொடர்ந்தும் இனவிரோத மனோநிலையை மக்கள் மத்தியில் பாதுகாப்பதற்கே பயன்படும். இதிலுள்ள முரண்பாடான விடயம் - ரணில் தலைமையிலான அரசாங்கம் தென்னாபிரிக்க வகையிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பில் பேசிவருகின்றது. இவ்வாறான சூழலில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா?

நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கு முன்னர் முதலில் அடிப்படையான விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அதில் முதன்மையானது, வடக்கு - கிழக்கில் பௌத்த விகாரைகளை விரிவாக்குதல் என்னும் பெயரில் இடம்பெறும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். தென்னிலங்கையிலிருந்து அரசியல்வாதிகள் இவ்வாறான செயல்பாடுகளை முன்னெக்கும்போது அதனை தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறை தொடர்பில் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லாது ஒருபுறம் தென்னாபிரிக்காவிடமிருந்து கற்றுக்கொள்வதாக கூறிக்கொண்டு மறுபுறம் அதற்கு முற்றிலும் மாறாக செயல்படுவதானது ஒருபோதும் நல்லிணக்கத்துக்கு வழிசமைக்காது.

பௌத்த மயமாக்கல் தொடர்பில் தமிழ் மக்கள் அச்சத்தோடு நோக்குகின்றனர். பௌத்த விகாரைகளை தமிழ் அரசியல் தரப்புகள் எதிர்க்கவில்லை - ஆனால், பௌத்த மயமாக்கலையே எதிர்க்கின்றனர். பௌத்தர்கள் வாழ்கின்ற இடங்களில் பௌத்த விகாரைகள் நிறுவப்படுவதையோ அல்லது பௌத்த பிக்குகள் அவர்களின் மத செயல்பாடுகளை முன்னெடுப்பதையோ எவரும் எதிர்க்கவில்லை - மாறாக தமிழ் மக்கள் வாழ்கின்ற இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவி, அதற்கான பக்தர்களை பேருந்துகளில் கொண்டுவருவதையே மக்கள் எதிர்க்கின்றனர். இதனை அரசாங்கம் மட்டுமல்ல பௌத்த மதபீடங்களும் புரிந்துகொள்ள வேண்டும். நல்லிணக்கத்தின் அடிப்படை ஒருவர் மற்றவரைப் பார்த்து அச்சப்படுதாக இருக்க முடியாது. அவ்வாறானதொரு சூழல் இருக்கும் வரையில் நல்லிணக்கம் என்பது கானல்நீராகவே இருக்கும்.

# காணிகளை விடுவிக்க கோரி முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு,ஜூலை 06

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி காணி உரிமையாளர்களினால் நேற்று போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டமானது, கேப்பாப்பிலவு இராணுவ முகாமிலிருந்து பேரணியாக ஆரம்பமாகி, கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து காணி உரிமையாளர்களினால் தங்களின் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்றும் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தி, பதாகைகளை ஏந்தியும் கோஷமெழுப்பியும் தங்களின் எதிர்ப்பினை வெளியிட்டனர்.

(அ)

# திருமணம் செய்ய மறுத்த காதலனை கடத்தி அடைத்து வைத்தாராம் காதலி!

கொழும்பு, ஜூலை 06

காதலித்து நெருக்கமாக இருந்து விட்டு, திருமணம் செய்ய மறுத்த இளைஞனை கடத்திச் சென்று அடைத்து வைத்த சம்பவம் தொடர்பில் யுவதி ஒருவரும் மேலும் நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை இவர்கள் கைது செய்யப்பட்டதாக பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர்.

வாதுவ பிரதேசத்தில் வசிப்பவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் அலோபோமுல்ல பின்வத்த வீதியில் முச்சக்கர வண்டியில் வந்த யுவதியொருவர் மற்றும் மற்றுமொரு குழுவினரால் இந்த இளைஞன் கடத்திச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட இளைஞனும் யுவதியும் சில காலமாக காதலித்து வந்துள்ளனர். அவர்கள் நெருக்கமாக இருந்ததுடன், யுவதியிடமிருந்து பணத்தையும் இளைஞன் பெற்றிருந்தார். எனினும், தற்போது யுவதியை திருமணம் செய்து கொள்ள இளைஞன் மறுத்தமையினால் அவர் கடத்தப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கடத்திச் செல்லப்பட்டு வெறிச்சோடிய வீடொன்றில் அடைத்து வைக்கப்பட்டு மீண்டும் விடுவிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட யுவதி பாதுகாப்பு பிரிவில் பணிபுரிபவர் எனவும், கடத்தப்பட்ட இளைஞர் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் கடத்த வந்த முச்சக்கரவண்டி மற்றும் அதன் சாரதியை கண்டுபிடிக்க மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# விடுதியில் யுவதியின் சடலம்! இளைஞர் உட்பட இருவர் கைது

கொழும்பு, ஜூலை 06

ஹோட்டல் அறைக்குள் மர்மமாக உயிரிழந்த யுவதி ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இறக்குவானை -மாதம்பை பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றிலேயே நேற்று முன் தினம் மாலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று இறக்குவானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

இறக்குவானையைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் ஒருவரும், இறக்குவானையைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதி ஒருவரும் ஹோட்டல் அறைக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த யுவதியை அறைக்குள் விட்டு, குறித்த இளைஞர் வெளியில் சென்று மீண்டும் ஹோட்டல் அறைக்குத் திரும்பியுள்ளார்.

இவ்வாறு மீண்டும் இளைஞர் அறைக்கு வருகை தரும்போது, அறை உள்பக்கமாக மூடப்பட்டுள்ளது.

அறையைத் திறப்பதற்கு குறித்த இளைஞர் முயற்சி செய்துள்ளார். எனினும், அறையைத் திறக்க முடியாததை அடுத்து, குறித்த இளைஞர் ஹோட்டல் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து, ஹோட்டல் ஊழியர் ஒருவரின் உதவியுடன் யன்னல் வழியாகப் பார்த்த போது, யுவதி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.


இந்த நிலையில், யன்னல் வழியாக உள்ளே சென்ற இளைஞர், யுவதியை மீட்டு கஹவத்தை வைத்தியசாலையில் சேர்த்துள்ளார். எனினும், யுவதி ஏற்கனவே உயிரிழந்துள்ளர் என்று வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யுவதி உயிரிழந்தமைக்கான காரணத்தைக் கண்டறியும் வகையிலான விசாரணைகளை இறக்குவானை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 06 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 21
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
எதையும் தாங்கும் மனோபலம் கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். சக ஊழியர்களுடன் இருந்த மோதல்கள் விலகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

**கடகம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**கன்னி**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
பழைய நினைவுகளின் சம்பவங்கள் நினைவுக்கு வரும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். கனவு நனவாகும்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பிரச்னைகள் வந்து நீங்கும். குடும்பத்தினருடன் இணக்கமாக செல்லவும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மேலதிகாரிகளுடன் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரம் தலைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

# ஹிந்தி மட்டும் தேசிய மொழியா? பா. ம. க., ம. தி. மு.க. எதிர்ப்பு!





சென்னை, ஜூலை 06

ஹிந்தியை மட்டுமே தேசிய மொழியாகக் கருதி மரியாதை அளிக்க வேண்டும் என்று பேசிய மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியாவுக்கு பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ், ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மத்திய அமைச்சரின் பேச்சு மத்திய சுகாதார அமைச்சக பணியாளர்கள்மீதான ஹிந்தி திணிப்பு ஆகும். இது கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. அவர் கூறுவதைப் போன்று ஹிந்தி, நாட்டின் தேசிய மொழியும் அல்ல, அது இந்தியாவை ஒருங்கிணைக்கவும் இல்லை. ஹிந்தி மொழிக்கு மட்டும் முதன்மைத்துவம் அளித்தாலும், ஹிந்தி பேசாத மக்கள்மீது திணித்தாலும் அது மக்களிடம் பிளவைத்தான் ஏற்படுத்தும்.

பிறமொழி பேசும் மக்களுக்கு எதிரான ஹிந்திஆலோசனை குழுக்கள் உள்ளிட்ட அமைப்புகளை உடனடியாக மத்திய அரசு கலைக்க வேண்டும். 8ஆவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளையும் மத்திய அரசின் அலுவல் மொழியாக அறிவிக்க மத்திய அரசு முன்வர வேண்டும் - என்றுள்ளது.

ம. தி. மு. க. பொதுச்செயலாளர் வைகோ, அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெறும் 8ஆவதுஅட்டவணையில் உள்ள 22 மொழிகளும் தேசிய மொழிகள்தான். அவற்றை மக்கள் பேசுவதற்கான மொழிகள் மட்டுமே என்று மத்திய அமைச்சர் சிறுமைப்படுத்துவது கண்டனத்துக்குரியது. ஹிந்தி மொழியை மட்டும் தேசிய மொழி என்று மத்திய பா.ஜ. க. அரசு அங்கீகரிப்பதும், இந்தி மொழியைத் திணிப்பதும் நாட்டின் பன்முகத்தன்மைக்கு எதிரானதாகும்.

இந்தியாவின் கலாசார ஒருமைப்பாடு என்பது பல்வேறு தேசிய இனங்களின் மொழி உரிமை, இன உரிமை, பண்பாட்டு உரிமையை ஏற்று மதித்து பாதுகாப்பதில்தான் அடங்கியிருக்கிறது என்பதை பா. ஜ. க. அரசு உணர வேண்டும். அதை விடுத்து ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு என பாஜக அரசு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது ஒருமைப்பாட்டுக்கு உலை வைக்கும் வேலையாகும் - என்றார். (ஐ)

# அண்ணாமலையின் யாத்திரையை அமித் ஷா தொடக்கி வைக்கிறார்

சென்னை, ஜூலை 06

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை மேற்கொள்ளும் 'என் மண், என் மக்கள்' யாத்திரையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இராமேஸ்வரத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கி வைக்கிறார்.

தமிழக பா. ஜ. க. மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்டத் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், 2024 பாராளுமன்ற தேர்தல், அமித் ஷாவின் தமிழக வருகை குறித்து பேசப்பட்டன.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில்,

தமிழகம் முழுவதும் வரும் 23ஆம் திகதி பா. ஜ. க. சார்பில் 5 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, தி. மு. க. அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து மாநிலத் தலைவர் அண்ணாமலை ஓரிரு நாட்களில் அறிவிப்பார்.

தமிழகம் முழுவதும் அண்ணாமலை மேற்கொள்ளும் 'என் மண்,என் மக்கள்' யாத்திரையை வரும்28ஆம் திகதி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ராமேஸ்வரத்தில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் தொடங்கி வைக்கிறார். ஒவ்வொரு நாளும் கிராமப் பகுதிகளில் 2 சட்டப் பேரவைத் தொகுதிகளையும், நகர்ப்புறங்களில் 4 தொகுதிகளையும் கடக்கும் வகையில் யாத்திரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# அ. தி. மு. கவின் ஊழலை விசாரிக்க அனுமதி கோரல்!

சென்னை, ஜூலை 06

அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளின் விசாரணையை தொடங்க அனுமதி வழங்க வேண்டும் என்று ஆளுநர் ரவிக்கு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கடிதம் எழுதியுள்ளார்.

அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் மீது ஊழல் வழக்குகள் தொடர்வதற்கான அனுமதி நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதையும், பல்வேறு தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதையும் சுட்டிக்காட்டி, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தமிழக ஆளுநர் ஆர்.என். ரவிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஊழல் வழக்குகளில் இசைவு ஆணை நிலுவையில் இருப்பது தவிர, மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட பதின்மூன்று தீர்மானங்கள் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளன. இவற்றில் இரண்டு தீர்மானங்கள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள முக்கியமான கோப்புகள் மற்றும் மசோதாக்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, இனியும் தாமதிக்காமல் ஊழல் வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை தொடங்கிட இசைவு ஆணையையும், மசோதாக்களுக்கு ஒப்புதலும் வழங்க வேண்டும்" என்று சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கூறியுள்ளார். (ஐ)

# அ. தி. மு.கவில் சேர்வதற்கு 1.6 கோடி பேர் விண்ணப்பம்

சென்னை, ஜூலை 06

அ. தி. மு. கவில் உறுப்பினர்களாக சேருவதற்கு இதுவரை ஒரு கோடியே 60 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் உறுப்பினர் சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 19ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தங்களுடைய பதிவை புதுப்பித்துக்கொள்வதற்கும், புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்குமான விண்ணப்பப் படிவங்கள் தலைமைக் கழகத்தில், 5.4.2023 முதல் விநியோகிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 4.5.2023 முதல் பெறப்பட்டு வருகின்றன.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 2 கோடி பேர்களை உறுப்பினர்களாக சேர்த்திட வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து செயல்பட்டு வந்த நிலையில், இன்றைய தேதி வரை ஒரு கோடியே 60 லட்சம் பேர் உறுப்பினர்களாக சேருவதற்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைந்திட எனது இதயமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

# 12 இலட்சம் கோடி ரூபாவை இலங்கை 2038ஆம் ஆண்டுக்குள் இழக்க நேரிடும்

## எச்சரிக்கிறார் பொருளியல் நிபுணர் நிஷான் டி மெல்

கொழும்பு, ஜூலை 06

**உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டினால் எதிர்வரும் 2038ஆம் ஆண்டுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 12 இலட்சம் கோடி ரூபாவை இழக்க நேரிடும் என பொருளியல் துறைசார்ந்த சிரேஷ்ட நிபுணர் கலாநிதி நிஷான் டி மெல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கடன் மறுசீரமைப்பு காரணமாக ஓய்வூதிய நிதியிலிருந்து கணிசமான தொகையை இழக்க வேண்டிவரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஊழியர் சேமலாப நிதி, ஓய்வூதிய நிதி ஆகியவற்றில் கடந்த மே மாதம் 31ஆம் திகதி நிலவரப்படி பிணை முறிகள் மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு சராசரியாக 13.5 வீத வட்டியை அரசாங்கம் பெற்றுவந்தது.

அதனை 9.1 வீதமாகக் குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, அரச கடன்களுக்கு 13.5 வீத வட்டி வழங்கப்பட்டால் அந்த நிதியின் மதிப்பு 2038 ஆம் ஆண்டாகும்போது 25 ட்ரில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது அந்த நிதியின் மதிப்பு 3.456 ட்ரில்லியனாகும் எனவும் அவர் கூறினார்.

அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பினால் 9.1 வீதமாக வட்டியை குறைப்பதன் மூலம் 12 இலட்சம் கோடி ரூபா இழப்பை சந்திக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# முறைப்பாட்டு குறிப்பேடுகளை எரித்தார் பொலிஸ் சார்ஜன்ட்!

கொழும்பு, ஜூலை 06

அக்கரபத்தனை பொலிஸாரின் முறைப்பாட்டு குறிப்பேடுகளின் பக்கங்களை எரித்து அழித்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டதாக அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த புத்தகத்தை அழிக்குமாறு பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு குறித்த பொலிஸ் சார்ஜன்ட் வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரம், குறித்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் அந்த குறிப்பேட்டை பெண்கள் விடுதிக்கு எடுத்துச் சென்று அதன் பக்கங்கள் அகற்றப்பட்டு, பலவற்றை எரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எந்தவொரு உயர் அதிகாரியிடமும் அனுமதி பெறாமல் பல்வேறு முறைப்பாடு குறிப்பேடுகளை அழித்த குற்றத்திற்காக இந்த சார்ஜன்ட் நுவரெலியா உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நுவரெலியா உதவி பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் இடம்பெற்று வருகின்றன. (அ)

# வவுனியா வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 06

வவுனியா ஏ-9 வீதியில் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைக்கு அண்மித்த பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கனரக வாகனத்தை ஏ-9 வீதி அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைக்கு அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளில் முந்திச்செல்ல முற்பட்டபோது எதிர்த்திசையில் வவுனியா நோக்கி பயணித்த ஹைஏஸ் வாகனத்துடன் மோதுண்டு அவர் உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவரான வவுனியா குருமன்காடு பகுதியைச் சேர்ந்த சிவகுமார் ரூபீன்ஸ்ராஜ் (வயது-24) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# இராகலை லயனில் தீ!



கொழும்பு, ஜூலை 06

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை கீழ் பிரிவு தோட்டத்தில் உள்ள லயன் தொகுதியில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இத் தோட்டத்தின் 20 குடியிருப்புகள் அடங்கிய இரண்டு பகுதிகளைக் கொண்ட இலக்கம் 06 தொடர் லயன் தொகுதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இந்த தீ விபத்து இடம்பெற்றதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

குறித்த தீ விபத்து சம்பவத்தில் 20 குடியிருப்புகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# நுவரெலியா வீதியில் மரமும், மின் கம்பமும் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு, ஜூலை 06

கடும் காற்றுடனான மழை காரணமாக நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி பிரதான வீதியில் மரமொன்றும், மின் கம்பமொன்றும் முறிந்து விழுந்தில் அவ்வீதியினூடான போக்குவரத்து தடைபட்டுள்ளதுடன் அனைத்து வாகனங்களும் மாற்றுவழியூடாக பயணிக்கின்றன.

நேற்று புதன்கிழமை அதிகாலை 1 மணியளவில் குறித்த மரமும் , மின் கம்பமும் முறிந்து விழுந்துள்ளதாகவும், இதன்போது எவருக்கும் காயமேற்படவில்லை என்றும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அப்பிரதேசவாசிகள் இணைந்து வீதியின் குறுக்கே வீழ்ந்த மரத்தை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நுவரெலியா பிரதான நகருக்கு மின் இணைப்பை வழங்கும் கம்பம் முறிந்து விழுந்துள்ளமையால் பிரதான நகருக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மின் கம்பிகள் எல்லாம் அறுந்து வீதியில் விழுந்துள்ளன. ஏனைய சில மின்கம்பங்களுக்கும் சேதம் ஏற்பட்டது.



சம்பவம் தொடர்பில் இப்பகுதிக்கு பொறுப்பான மின்சார சபைக்கு உடனே அறிவித்து பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு முறிந்த மின் கம்பத்தை மாற்றி சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

# இலங்கைக்கு 107 ஆவது இடம்!

கொழும்பு, ஜூலை 06

2023 ஆம் ஆண்டுக்கான உலகலாவிய சமாதான சுட்டெண் பட்டியலில் இலங்கை 107 ஆவது இடத்தை பெற்றுள்ளது.

163 நாடுகளை உள்ளடக்கிய இந்த பட்டியலில் கடந்த ஆண்டு இதே பட்டியலில் 90 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இந்த ஆண்டு 2.136 சுட்டெணுடன் 107 ஆவது இடத்தை அடைந்துள்ளது.

163 நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதார நிலையை அடிப்படையாகக்கொண்டு அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழுவினர் பூகோள சமாதான சுட்டியை தயாரித்துள்ளனர்.

இவ்வருடத்திற்கான குறித்த பட்டியலில் ஐஸ்லாந்து முதலிடத்தை பிடித்துள்ள அதே நேரம் ஆப்கானிஸ்தான் இறுதி இடத்தில் உள்ளது.

உலகின் முதல் 10 அமைதியான நாடுகள்

ஐஸ்லாந்து
டென்மார்க்
அயர்லாந்து
நியூஸிலாந்து
ஆஸ்திரியா
சிங்கப்பூர்
போர்த்துக்கல்
ஸ்லோவேனியா
ஜப்பான்
சுவிட்சர்லாந்து. (அ)

# தயாசிறி எம்.பியின் மகனிடம் கத்தி முனையில் கொள்ளை!

கொழும்பு, ஜூலை 06

பம்பலப்பிட்டி லேயார்ட்ஸ் வீதியில் உள்ள கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு அருகில் காரை நிறுத்திவிட்டு காதலியுடன் பேசிக்கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் மகன் கவின் ஜயசேகரவை கத்தியை காட்டி மிரட்டி தங்கச் சங்கிலியை கொள்ளையடித்த நபரை கைது செய்ய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை இந்த சம்பவம் நடந்தது.

ரூ.163,000 பெறுமதியான தங்கச்சங்கிலியும், வாகனத்துக்குள்ளிருந்த ரூ.3,000 பணமும் கொள்ளையடிக்கப்பட் டுள்ளது.

கண்காணிப்புக் கமெராவில் பதிவான காட்சிகள் மூலம் கொள்ளையனை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

ஜயசேகர தனது காதலியுடன் காரில் பேசிக்கொண்டிருந்தபோது, நபர் ஒருவர் காருக்கு அருகில் வந்து பணம் கேட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொடுக்கப் பணம் இல்லை என்று கூறியபோது, அந்த நபர் தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து நீட்டி, முதலில் கார் டாஷ்போர்டில் இருந்த ரூ.3 ஆயிரத்தை கொள்ளையடித்துவிட்டு பையை பறிக்க முயன்றுள்ளார்.

சந்தேக நபர் பைக்குள் இருந்த தங்க நகையை பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த கொள்ளையன்போதைக்கு அடிமையாகி இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# யாழ்ப்பாணம்-காரைக்கால் கப்பல் சேவைக்குச் சிக்கல்!

## புதிய மார்க்கத்துக்கு புதுவை முதல்வரிடம் செந்தில் கோரிக்கை

சென்னை, ஜுலை 06

**யாழ்ப்பாணம்- காரைக்கால் இடையிலான கப்பல் சேவைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதால் அதன் வழித்தடத்தை மாற்றி புதுச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம், திருகோணமலைக்கு கப்பல் சேவையை தொடங்க நடவடிக்கை எடுத்தால் சுற்றுலா, வணிகத் தொடர்பு மேம்படும் என்று புதுவை முதல்வர் ரங்கசாமிக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.**



முதல்வர் ரங்கசாமியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் முதல்வர் அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

அச்சந்திப்பின்போது பல முக்கிய விடயங்களை உரையாடினர். அச்சந்திப்பில் பேரவைத் தலைவர் செல்வம், அமைச்சர் சந்திர பிரியங்கா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

அப்போது அவர் முதல்வர் ரங்கசாமிக்கு அளித்த கடிதத்தில், "இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு தங்களின் சார்பில் ஏராளமான உதவிகளை செய்துள்ளீர்கள். குறிப்பாக இலங்கை பொருளாதார வீழ்ச்சி சமயத்தில் புதுச்சேரியில் இருந்து மருந்துகளை அனுப்பியது பெரும் உதவியாக இருந்தது.

காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வரையிலான கப்பல் சேவை முயற்சிகளுக்கு நடைமுறை சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதனால் அந்த வழித்தடத்தை மாற்றி புதுச்சேரி-காங்கேசன்துறை மற்றும் திருகோணமலைக்கு கப்பல் சேவையை தொடங்க அனுமதி வழங்கும் நடவடிக்கை எடுத்தால் சுற்றுலா மற்றும் வணிகத் தொடர்பு மேம்படும்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள கோணேஸ்வரம் கோயில், யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோயில் மற்றும் நைனாதீவு, கதிர்காமம் முருகன் கோயில், நுவரேலியாவில் உள்ள சீதை கோயில், ரம்பொடவில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் உள்ளிட்ட கோயில்களில் சிறப்பு தரிசனங்களை மேற்கொள்ள இலங்கைக்கு முதல்வர் ரங்கசாமி சிறப்பு அழைப்பாளராக வரவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# முன்னாள் எம்.பி. தங்கத்துரையின் 26ஆவது நினைவுநாள் திருமலையில்

திருமலை, ஜுலை 06

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அருணாசலம் தங்கத்துரையின் 26ஆவது நினைவுநாள் அஞ்சலி நிகழ்வு நேற்று கிளிவெட்டியில் இடம்பெற்றது.



இதன்போது கடந்த வருடம் மக்களால் நிர்மாணிக்கப்பட்ட நினைவுச் சிலைக்கு தமிழரசுக் கட்சியின் மூதூர் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் சி.துரைநாயகம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை, கிளிவெட்டி மகா வித்தியாலயத்தின் அதிபர், பாடசாலையின் மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர். (அ)

# யானைகளை பெரஹராவிலிருந்து அகற்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சியாம்

## அஸ்கிரிய பீடாதிபதி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜுலை 06

பௌத்த விகாரை ஒன்றில் வைத்து யானை முத்துராஜா மோசமாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து, பல அரச சார்பற்ற நிறுவனங்கள் யானைகளை பெரஹரா கலாசாரத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்ற கருத்தை விளம்பரப்படுத்த முயல்வதாக அஸ்கிரிய பீடாதிபதி நாரம்பனாவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.


அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொரு பெரஹரா காலத்திலும் மேற்கொள்ளும் திட்டமிட்ட பிரசாரம் இது என்றும் தேரர் கூறினார்.

"எந்த நாட்டிலும் ஒவ்வொரு தேசத்திற்கும் அதன் சொந்த கலாசாரம் உள்ளது. சிங்கள பௌத்த கலாச்சாரத்தில், யானைகளைப் பயன்படுத்தினோம். இங்கிலாந்தில், குதிரைகள் கலாசாரத்தின் ஒரு பகுதியாக அவர்களின் அரச விழாக்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன" என்று அவர் கூறினார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின்படி, 2022 இல் மனித-யானை மோதலின் போது அதிக எண்ணிக்கையிலான யானைகள் கொல்லப்பட்டன. ஆனால் துஷ்பிரயோகம் காரணமாக வளர்ப்பு யானைகள் எதுவும் இதுவரை இறக்கவில்லை என்றும் தேரர் குறிப்பிட்டார்.

யானைகளை பராமரிப்பதற்கான தொழில் பயிற்சியோ அல்லது கல்வியோ வழங்காததே யானைகள் துன்புறுத்தப்படுவதற்கு காரணம் என்றும், விகாரைகளுக்கு யானைகளை வழங்கக்கூடாது என பாஹியங்கல ஆனந்த சாகர தேரரின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள அஸ்கிரிய பீடாதிபதி, யானை வளர்ப்பு எப்போதும் நடைமுறையில் இருந்து வருவதாகவும் குறிப்பிட்டார். (அ)

# அக்கிராச மன்னனுக்கு நேற்று வணக்கம் செலுத்தும் நிகழ்வு!



கிளிநொச்சி, ஜுலை 06

கிளிநொச்சி-அக்கராயன் சந்தியில் அமைந்துள்ள அக்கிராசன் மன்னனின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தும் நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அக்கிராசன் மன்னனுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

இந் நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

# ஹரீஸ், இசாக் ரஹ்மான் எம்.பிக்கள் ஜனாதிபதி ரணிலுடன் நேற்று பேச்சு!

கொழும்பு, ஜுலை 06

இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினருடனான பேச்சு காலதாமதமாவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினருடனான பேச்சு காலதாமதமாவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான தாங்கள் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியதாகவும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் உடனடியாக குறித்த பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் கட்சிகளையும், முஸ்லிம் எம்.பிக்களையும் அழைக்க உள்ளதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், தடை செய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடை நீக்கம் தொடர்பில் இது வரை வர்த்தமானி அறிவிப்பு வெளிவராமை சம்பந்தமாக வினவியபோது, பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் சகல பணிகளையும் மேற்கொண்டு வர்த்தமானி அறிவிப்பில் ஜனாதிபதி கையெழுத்திட தேவையான நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும், விரைவில் தடை நீக்க வர்த்தமானி அறிவிப்பு வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் முஸ்லிம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு உரிய கடமைப் பொறுப்புக்களை வழங்குவதில் உள்ள பாரபட்சம் தொடர்பிலும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டதாகவும் இந்த விடயம் தொடர்பில் முஸ்லிம் புத்திஜீவிகளையும், முஸ்லிம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளையும் விரைவில் தான் சந்தித்துப்பேச ஏற்பாடு செய்வதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அஸ்வெசும பயனாளிகள் தெரிவில் பொருத்தமான பயனாளிகள் புறக்கணிக்கப்பட்டுள்ள விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு முன்வைத்தபோது, உரிய பயனாளிகளுக்கு இந்த உதவிகள் கிடைக்கும் விதமாக அஸ்வெசும பயனாளிகள் தெரிவில் இடம்பெற்றுள்ள குறைபாட்டை நிவர்த்திசெய்ய உள்ளதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

மேலும் மாகாண சபைகளில் உள்ள நிர்வாக குறைபாட்டை சீர்செய்யவும், நிர்வாக திறனை அதிகரிக்க வேண்டிய அவசியம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. நாட்டிலுள்ள ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் மாகாண அமைச்சுக்களின் நிர்வாக வினைத்திறனை அதிகரிக்க புதிய பொறிமுறையை உருவாக்கி அதன்மூலமாக மாகாண அமைச்சுக்கள் வினைத்திறனுடன் செயற்பட வழிவகை ஏற்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது உறுதிபடக் கூறினார் என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மேலும் தெரிவித்தார். (அ)

# இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் செயலிழந்ததால் அதிக மரணங்கள்!

## சபையில் சுட்டிக்காட்டினார் தயாசிறி

கொழும்பு, ஜூலை 06

**கல்கமுவ, குளியாப்பிட்டிய உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள பல பொது வைத்தியசாலைகளில் சிறுநீரக நோயாளர்களுக்கு இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் செயலிழந்துள்ள காரணத்தால் அதிகளவில் மரணங்கள் இடம்பெற்று வருவதாக குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**



சுகாதார அமைச்சின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்னையினால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரங்களை திருத்துவதற்கு கேள்வி கோரப்பட்டிருந்தபோதிலும், அந்த கேள்வி கோரலில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளால் அதனை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒவ்வொரு வருடமும் வரவு -செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கு சுமார் 200 பில்லியன் ஒதுக்கப்படுவதாகவும், ஆனால் சிறுநீரக நோயாளர்களுக்கு இரத்தம் சுத்திகரிக்கும் கருவிகளை வெளியில் வாங்கி வருமாறு கூறப்படுவதாகவும், வெளியில் இருந்து வாங்கி வர மக்களிடம் பணம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தயாசிறி ஜயசேகர தெரிவித்த விடயங்களில் ஓரளவுக்கு உண்மை இருப்பதாக தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இது தொடர்பாக நீதிமன்றத்திடம் இருந்து உத்தரவுகள் கூட கிடைத்துள்ளதாகவும், இன்னும் சில தினங்களில் பிரச்னைக்கு தீர்வு காண்பதாகவும் கூறினார். (அ)

# அவசர நிலை ஏற்படின் முகங்கொடுக்க தயார்!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 06

அனைத்து அத்தியாவசிய உயிர் பாதுகாப்பு மருந்துகளும், தம்வசம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அவசர நிலைமை ஏற்பட்டால், அதற்கு முகங்கொடுக்கத் தயார் என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சிறி சந்தரகுப்த தெரிவித்தார்.

ஹொரணை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர், 350 அத்தியவசிய மருந்துகள் உள்ளதாகவும் அதேவேளை சுமார் 100 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும், மருந்துகள் தங்களுக்கு தொடர்ச்சியாக கிடைத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பல மாதங்களாக இயங்காத சி.ரி. ஸ்கான் இயந்திரங்கள்!

கொழும்பு, ஜூலை 06

சி.ரி. ஸ்கான் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான இயந்திரங்கள் அரச வைத்தியசாலை கட்டமைப்பில் தொடர்ந்தும் செயலிழந்துள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

இதனால், பல்வேறு பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாமல் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக ஸ்ரீ சந்ரகுப்தவிடம் வினவியபோது, குறித்த இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக நிதி அமைச்சிடம் இருந்து தற்போது நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளதாக கூறினார்.

அதற்கமைய, அவற்றை விரைவாக பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மண்டைதீவுக் காணிகளை கடற்படைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கையை எதிர்ப்போம்

## சிறீதரன் எம்.பி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 06

மண்டைதீவுப் பகுதியில் எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ள காணிகள் சுவீகரிப்புக்கான அளவீட்டுப் பணிகளுக்கு எதிராக அன்றைய தினம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட வருமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலுசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், எதிர்வரும் 12 ஆம் திகதி அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இவ் அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அன்றைய தினம் காலை.7.30 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# நிலுவையிலுள்ள தொகையை செலுத்த மதுவரித் திணைக்களத்தால் அவகாசம்

கொழும்பு, ஜூலை 06

நாட்டிலுள்ள சிறந்த ஒன்பது மதுபான உற்பத்தியாளர்களுக்கு நிலுவைத் தொகையை செலுத்த மதுவரித் திணைக்களம் 14 நாட்கள் கால அவகாசம் வழங்கியுள்ளது.

உரிய வரிகளை குறிப்பிட்ட நேரத்தில் வசூலிக்கவில்லை என தொடர்ச்சியாக எழுந்த விமர்சனங்களால் இவ்வாறு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மொத்த நிலுவைத் தொகையான 6.2 பில்லியன் ரூபாயில், 2.5 பில்லியன் ரூபாய் வரி நிலுவையாக கணக்கிடப்பட்டுள்ளதாக அண்மைய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

எஞ்சிய 3.8 பில்லியன் ரூபாய் தாமதக் கட்டணமாக கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெற்றிடமாக இருக்கும் பொலிஸ்மா அதிபர் பதவி

கொழும்பு, ஜூலை 06

பட்டப்பகலில் துப்பாக்கிச் சூடு, கொலைகள், போதைப் பொருள் கடத்தல் போன்ற குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பின்னணியில், இலங்கை பொலிஸ் திணைக்களம் ஒரு வாரத்திற்கும் மேலாக பொலிஸ்மா அதிபர் இன்றி இயங்கி வருகின்றது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு வழங்கப்பட்ட மூன்று மாத கால சேவை நீடிப்பு கடந்த 26 ஆம் திகதி முடிவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ்மா அதிபர் பதவிக்கு பொருத்தமான ஒருவரை அரசியலமைப்புச் சபைக்கு இதுவரை சிபாரிசு செய்யவில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, வெற்றிடமாகவுள்ள பொலிஸ்மா அதிபர் பதவிக்கு பல உயர் அதிகாரிகள் மத்திய பனிப்போர் உருவாகியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, அந்த பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாகப் பணிகள் முடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், இந்த ஆண்டு ஜனவரி முதல் நாடு முழுவதும் 40 இற்கும் மேற்பட்ட சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், இதில் 25 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில், குற்றக் கும்பல்களுக்கிடையிலான போட்டியினால் ஏற்படும் இந்தக் கொலைகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பான குற்றச் செயல்களை ஒடுக்குவதற்கு இரகசிய நடவடிக்கைகளை இலங்கை பொலிஸார் அதிகரித்திருந்தனர்.

எவ்வாறாயினும், ஒரு வாரத்துக்கும் மேலாக பொலிஸ் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் உரிய நடவடிக்கைகளுக்கு பொலிஸ்மா அதிபரின் நேரடி வழிகாட்டல் இல்லாமை உட்பட பல கடுமையான பிரச்னைகளால் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாக உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, 36 ஆவது பொலிஸ்மா அதிபர் பதவிக்கு அதிகாரிகள் பலருக்கு இடையில் பனிப்போர் உருவாகியுள்ளதோடு, குறிப்பிட்ட சில அதிகாரிகளை தெரிவு செய்யவேண்டாம் என ஜனாதிபதிக்கு பல்வேறு தரப்பினரும் ஆலோசனைகளும் ஆட்சேபனைகளும் முன்வைத்துள்ளனர். (அ)

# வழக்கு மொழிபெயர்ப்புக்கு மட்டும் இரண்டு வருடங்கள்!

## சபையில் சுட்டிக்காட்டினார் சாள்ஸ் எம்.பி

கொழும்பு, ஜூலை 06

வடக்கு-கிழக்கில் நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணைகள் மேன்முறையீட்டுக்காக கொழும்புக்கு வரும்போது அதற்கான மொழிபெயர்ப்புக்கு மட்டும் இரண்டு வருட காலங்கள் செலவாவதாக பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டினார்.

நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சார்ள்ஸ் நிர்மலநாதன் இதனை கூறினார்.

ஆகவே வடக்கு-கிழக்கு நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணைகள் மேன்முறையீட்டுக்கு வரும்போது தமிழ் நீதியரசர்கள் அதனை ஆராயவேண்டும் அல்லது வடக்கு-கிழக்குக்கு என பொதுவான மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அமைக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவற்றில் ஏதாவது ஒன்றினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நீதிமன்ற விசாரணைகளில் தாமதம் ஏற்படாது எனவும் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டினார். (அ)

# வரணி விபத்தில் இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 06

வரணிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம்- பருத்தித்துறை வீதியில் சுட்டிபுரம் அம்மன் கோயிலடியில் இரவு 10.30 மணியளவில் விபத்து நிகழ்ந்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன், மரத்துடன் மோதி விபத்திற்குள்ளானார். சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

வடமராட்சி, தேவரையாளி பகுதியை சேர்ந்த புஸ்பராசா ராஜ்குமார் (வயது-28) என்பவரே உயிரிழந்தார்.

வடமராட்சியிலுள்ள தனியார் கட்டுமான நிறுவனமொன்றின் பணியாளரான அவர், பளை பகுதியில் கட்டுமானப் பணி தொடர்பாக சென்றுவிட்டு திரும்பிச் செல்லும்போதே விபத்திற்குள்ளானார்.

அவர் அண்மையில்தான் திருமணமானவர் என கூறப்படுகின்றது. (அ)

# செந்தில் பாலாஜி வழக்கு: நீதிபதிகளின் மாறுபட்ட தீர்ப்பில் இடம் பெற்ற அம்சங்கள் என்ன? இனி அடுத்து என்ன நடக்கும்?

தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை சட்ட விரோத காவலில் வைத்திருப்பதாகக் கூறி அவரது மனைவி மேகலா தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் மாறுபட்ட தீர்ப்பை வழங்கியுள்ளது. வழக்கை விசாரித்த இரு நீதிபதிகளுமே ஒருவருக்கு ஒருவர் முரண்பட்ட தீர்ப்பை அளித்துள்ளனர்.

இதனால், இந்த வழக்கைப் பொருத்த வரை அடுத்தது என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. அதேநேரத்தில், சென்னை காவேரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்குப் பின்னர் செந்தில் பாலாஜி தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

**திடீர் நெஞ்சு வலி - காவேரி மருத்துவமனையில் சிகிச்சை**

அதிமுக ஆட்சியில் 2011 முதல் 2015 வரை போக்குவரத்து அமைச்சராக இருந்த போது, ஒட்டுநர், நடத்துநர், உதவியாளர் பணி நியமனங்களுக்கு லஞ்சம் வாங்கியதாக அமைச்சர் செந்தில் பாலாஜி மீது வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த விவகாரத்தில் சட்ட விரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சென்னை, கரூரில் உள்ள செந்தில் பாலாஜியின் வீடு, அலுவலகங்களில் சோதனையிட்ட அமலாக்கத் துறை கடந்த மாதம் 14-ம் தேதி அதிகாலை அவரை அலுவலகத்திற்கு அழைத்துச் செல்ல முற்பட்டனர்.

அப்போது, காருக்குள்ளேயே திடீர் நெஞ்சுவலியால் அலறித் துடித்த செந்தில் பாலாஜி சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் நீதிமன்ற அனுமதியுடன் காவேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

நீதிமன்ற காவலில் அவருக்கு அங்கேயே இதயத்தில் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. தற்போது காவேரி மருத்துவமனையிலேயே அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



**செந்தில் பாலாஜி மனைவி ஆட்கொணர்வு மனு**

செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை கைது செய்தது சட்டவிரோதம், அவரது கைதுக்கான காரணங்கள் சொல்லப்படவில்லை என்று கூறி அவரது மனைவி மேகலா, சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தார். சட்டவிரோத காவலில் உள்ள செந்தில் பாலாஜியை உடனே விடுவிக்க வேண்டும் என்பது அவரது கோரிக்கை.

நீதிபதிகள் நிஷா பானு, பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் இந்த மனு கடந்த மாதம் 27ம் தேதி விசாரணைக்கு வந்தது. அமைச்சர் செந்தில் பாலாஜியின் மனைவி மற்றும் அமலாக்கத்துறை ஆகிய இருதரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் திங்கள் காலை 10.30 மணிக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிபதிகள் நிஷா பானுவும், பரத சக்கரவர்த்தியும் மாறுபட்ட தீர்ப்பை வழங்கினர்.

**நீதிபதி நிஷா பானு தீர்ப்பு விவரம்**

செந்தில்பாலாஜி மனைவி மேகலாவின் ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு உகந்தது என்றும், சட்ட விரோத பணப் பரிமாற்ற சட்டத்தின் கீழ் விசாரணைக் காவல் கோர அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இல்லை என்றும் நீதிபதி நிஷா பானு தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், அமைச்சர் செந்தில் பாலாஜி, காவேரி மருத்துவமனையில் சிகிச்சை இருந்த காலத்தை விசாரணைக் காவல் நாட்களாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று அமலாக்கத்துறை தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடி செய்தும் அவர் உத்தரவிட்டார்.

**நீதிபதி பரத சக்கரவர்த்தி தீர்ப்பு விவரம்**

மற்றொரு நீதிபதி பரத சக்கரவரத்தியோ, மேகலா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என்று தீர்ப்பளித்தார். கைதோ அல்லது தடுத்து வைக்கப்பட்டிருப்பதோ சட்ட விரோதமாக இல்லாத பட்சத்தில் இது போன்ற ஆட்கொணர்வு மனுக்கள் விசாரணைக்கு உகந்தவை அல்ல என்று அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கைப் பொருத்தவரை, நீதிமன்ற காவலை சட்டவிரோதமானது எனறு மனுதாரர் கோரவில்லை என்பதால் இந்த ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்டது முதலே மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்து வரும் அமைச்சர் செந்தில் பாலாஜி ஒரு நாள் கூட அமலாக்கத்துறை காவலில் இருந்ததே இல்லை என்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, செந்தில் பாலாஜி சிகிச்சையில் இருந்த காலத்தை விட்டுவிட்டே, அமலாக்கத்துறையின் விசாரணைக் காவல் நாட்களை கணக்கிட வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, ஜூன் 14 முதல் அமைச்சர் செந்தில் பாலாஜி மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகும் வரையிலான



கால கட்டத்தை அமலாக்கத்துறையின் விசாரணைக் காவல் நாட்களில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

**அடுத்தது என்ன?**

அமைச்சர் செந்தில் பாலாஜியின் மனைவி மேகலா தொடர்ந்த ஆட்கொணர்வு வழக்கில் இரு நீதிபதிகளும் மாறுபட்ட தீர்ப்பை வழங்கியுள்ளதால், இனி இந்த வழக்கை 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்கும். அந்த அமர்வை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி விரைவில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, மேகலாவின் ஆட்கொணர்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சென்னை உயர்நீதிமன்ற முடிவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அமலாக்கத்துறை தாக்கல் செய்த மனு மீதான விசாரணை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**செந்தில் பாலாஜி மீதான வழக்கு என்ன?**

2011 முதல் 2015 வரை அதிமுக ஆட்சியில் போக்குவரத்து துறை அமைச்சராக செந்தில் பாலாஜி பதவி வகித்த போது, ஓட்டுநர், நடத்துநர் உள்ளிட்ட பணியிடங்கள் நிரப்பப்பட்ட போது முறைகேட்டில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பலர் புகார் அளித்திருந்தனர். காவல்துறை உரிய விசாரணை நடத்தவில்லை எனக்கூறி சிலர் உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்திருந்தனர்.

2018ஆம் ஆண்டு மெட்ரோ போக்குவரத்து கழக தொழில்நுட்ப ஊழியரான அருள்மணி என்பவர் போக்குவரத்து கழகத்தில் வேலைகளைப் பெற்றுத்தர பலரிடம் லஞ்சம் பெற்றப்பட்டதாக அமைச்சர் செந்தில் பாலாஜி உட்பட பலர் மீது புகார் அளித்திருந்தார்.

முதல் கட்ட புகார்களில் அமைச்சர் செந்தில் பாலாஜி மீது குற்றம்சுமத்தப்படவில்லை. இந்த நிலையில் அமைச்சர் செந்தில் பாலாஜியையும் சேர்த்து லஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட வேண்டும் என வழக்கு தொடரப்பட்டது. சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கடந்த 2018ஆம் ஆண்டு வழக்கு பதிவு செய்தனர்.

மோசடியில் சட்ட விரோத பணப் பரிமாற்றம் நடந்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில் அமலாக்கத்துறையும் வழக்கு பதிந்து விசாரணையை தொடங்கியது. மத்திய குற்றப்பிரிவு வழக்கை ரத்து செய்யும்படியும் அமலாக்கத்துறையின் விசாரணைக்கு தடை கோரியும் செந்தில் பாலாஜி உயர் நீதிமன்றத்தில் முறையிட்டார். இதில், மத்தியக் குற்றப்பிரிவு வழக்குகள் ரத்து செய்யப்பட்டு, அமலாக்கத்துறை விசாரணைக்கு தடை விதிக்கப்பட்டது.

செந்தில் பாலாஜிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கட்டுப்பாடுகள் விதித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து அமலாக்கத் துறை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

அதே சமயம் பழைய வழக்குகளை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்கிற உத்தரவை எதிர்த்து அமைச்சர் செந்தில் பாலாஜியும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்குகளை விசாரித்த உச்சநீதிமன்றம், அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வழக்குகளை ரத்து செய்ய மறுத்ததுடன் தமிழ்நாடு காவல்துறை முறையாக விசாரணை நடத்தி இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கடந்த மாதம் உத்தரவிட்டது.






# ரணிலுக்கு, தமிழ் கட்சிகள் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்?





யதீந்திரா

இனப்பிரச்சினைக்கான தீர்வை காண்பதற்கு தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக வரவேண்டுமென்று, ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார். அண்மையில் இங்கிலாந்திற்கு சென்றிருந்த, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாட்டு தலைவர், அண்ணாமலையும் இவ்வாறானதொரு கருத்தையே அங்கு வலியுறுத்தியிருக்கின்றார். தமிழ் கட்சிகள் அனைத்தும் இந்தியாவிடம் ஒன்றாகச் செல்ல வேண்டுமென்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

ரணில் இந்த வேளையில் இவ்வாறு கூறுவதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை காணப் போவதாக குறிப்பிட்ட, ரணில் விக்கிரமசிங்க, இப்போது, தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக வரவேண்டுமென்று கூறுகின்றார். ரணிலின் கூற்றுக்கு பின்னால், காலத்தை இழுத்தடிக்கும் நோக்கம் இருக்கலாம். அரசியலமைபிலுள்ள 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் தமிழ் கட்சிகளிடையே மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருப்பதை புரிந்துகொண்டு, இவ்வாறானதொரு கருத்தை ரணில் தெரிவித்திருக்கலாம்.

உங்கள் பக்கத்தில் ஒற்றுமையில்லை. தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் யாருடன் பேசுவதென்னும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படியான கருத்து கொழும்பிலுள்ள தூதரக மட்டங்களிலும் உண்டு. மேற்கு நாட்டு தூதுவர் ஒருவர் என்னிடம் ஒரு முறை இப்படிக் கேட்டார். உங்கள் பக்கத்திலுள்ள கட்சிகள் மத்தியில் குழப்பங்கள் காணப்படுகின்றதே. இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் யாருடன் பேசுவது? எனது பதில், நீங்கள் கூறுவது உண்மைதான் ஆனால் தமிழ் கட்சிகள் மத்தியிலிருக்கும் குழப்பங்களுக்காக, நீங்கள், தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை புறம்தள்ளமுடியாது.

தமிழ் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை ஏற்பட வேண்டும். அவர்கள் தங்களுக்குள் பிளவுபடக் கூடாது. ஒரு ஐக்கிய முன்னணியாக செயற்பட வேண்டும். இவ்வாறான கோரிக்கைகள் கடந்த பத்து வருடங்களாக பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சிகளிலும் பலர் ஈடுபட்டிருந்தனர். ஆனாலும் தமிழ் கட்சிகள் ஒன்றுபடவில்லை. மேலும், மேலும் பிளவுபட்டே சென்றனர்.

இந்த நிலையில், உள்ளூராட்சி தேர்தலை காரணம் காண்பித்து, வீட்டுச் சின்னத்தின் கீழிருந்த, தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பிளவுற்றது. தமிழரசு கட்சி, கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் விக்கினேஸ்வரன் தலைமையிலான கூட்டணியிலிருந்த மூன்று கட்சிகளும் இணைந்து, குத்துவிளக்கு சின்னத்தில் தொடர்ந்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பாக இயங்கிடிவருகின்றனர். அவர்களுடன் இணைந்து பயணிப்பாரென்று எதிர்பார்க்கப்பட்ட சி.வி.விக்கினேஸ்வரனோ, தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து வெளியேறிய மணிவண்ணணையும் இணைத்துக் கொண்டு, தனியாக செயற்பட்டுவருகின்றார். மறுபுறம், (சைக்கிள் சின்னம்) இந்திய எதிர்ப்பு அரசியல் கட்சியான, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) தொடர்ந்தும் ஏனை கட்சிகளை இந்திய முகவரென்று கூறிக்கொண்டு, தொடர்ந்தும் 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர், தென்னிலங்கையின், சரத்வீசசேகர, விமல்வீரவன்ச, உதய கம்பன்பில ஆகியோரின் இந்திய எதிர்ப்பு வரிசையில் இருக்கின்றனர்.

தமிழர் அரசியல் இவ்வாறு பல அணிகளாக பிளவுற்றிருக்கும் சூழலில்தான், தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை காண வேண்டுமாயின், தமிழ் கட்சிகள் ஒன்றாக வரவேண்டுமென்று ரணில் கூறுகின்றார். குறிப்பாக 13வது திருத்தச்சட்ட விடயத்தில், சிங்கள கடும்போக்காளர்கள் மட்டுமல்ல, மறுபுறம், தமிழ் தேசிய தரப்புக்களுக்குள்ளும் பிளவுகள் உண்டு என்பதை நன்றாக புரிந்து கொண்டே, தமிழ் கட்சிகளை ஒன்றாக வருமாறு ரணில் அழைக்கின்றார். விரைவில் இந்தியாவிற்கு செல்லவுள்ள நிலையிலேயே ரணில் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். இவ்வாறான அப்பிராயம் புதுடில்லியிலும் உண்டு. இந்தியா 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் தெளிவாக கூறிய பின்னரும் கூட, இந்தியாவிடம் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைப்பதை புதுடில்லி எவ்வாறு நோக்குமென்பதும் முக்கியமானது.

இறுதியாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி.ஜெயசங்கர், இந்த விடயம் தொடர்பில் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். 13வது திருத்தச்சட்ட விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் உங்களோடு நிற்கும் அதற்கப்பால் செல்வதை கூடாதென்று இந்தியா கூறவில்லை, ஆனால், அந்த விடயத்திற்கு இந்தியாவினால் எதனையும் செய்ய முடியாதென்பதையே அவர் மறைமுகமாக சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் இதற்கு பின்னரும் கூட, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தில், சமஸ்டி தொடர்பில் குறிப்பிட்டதை நிச்சயம் புதுடில்லி ரசித்திருக்காது.

இந்த விடயத்தை ரணில் நிச்சயம் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்வார். ரணில் மிகவும் தந்திரமான அரசியல்வாதி. ஏனையவர்கள் போன்று ரணிலை கையாளுவது கடினம். ரணில் ஆரம்பத்திலேயே 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாக குறிப்பிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து தென்னிலங்கையில் பௌத்த பிக்குகள், 13இன் பிரதியை கொழுத்தி தங்களின் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். 13வது திருத்தச்சட்டத்தை தான் உச்சரித்தால், தென்னிலங்கையில் எதிர்ப்புக்கள் வெளிவரும் என்பதை தெரிந்து கொண்டுதான், ரணில் அவ்வாறான கருத்தை தெரிவித்திருந்தார்.

ஆனால் பௌத்த பிக்குகள் வெளியில் வருவதற்கு முன்பாகவே, வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) 13வது திருத்தச்சட்டத்தை எதிர்த்து வடக்கின் வீதிகளில் இறங்கியிருந்தது. பௌத்த பிக்குகள் 13இன் பிரதியை கொழுத்தியது போன்று, அவர் செய்யவில்லை. அது ஒன்றுதான் பௌத்த பிக்குகளுக்கும், காங்கிரசுக்குமுள்ள வித்தியாசம். ஆறு கட்சிகள் இணைந்து, இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதியதை தொடர்ந்து, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, வடக்கில் வீதிகளில் ஊர்திப் பவனியை முன்னெடுத்தது. இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதிய கட்சிகளை இந்திய முகவர்களென்று கஜேந்திர குமார் குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம் 13வது திருத்தச்சட்டத்தை மட்டும் தாங்கள் எதிர்க்கவில்லை மாறாக, அதனை வலியுறுத்தும் இந்தியாவையும் எதிர்க்கின்றோம் என்பதையே அவர்கள் குறிப்பிட்டனர். அதே வேளை, பூபதி கணபதிப்பிள்ளை நினைவு தினத்தின் போது, இந்திய படைகள் தமிழ் பெண்களை பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கியதாகவும், தமிழ் இளைஞர்களை கொன்றதாகவும், காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், இப்போது மீண்டும் இந்தியா 13வது திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தமிழ் கட்சிகளை நிர்பந்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

காங்கிரஸ் (முன்னணி) வெளிப்படையாகவே இந்திய எதிர்ப்பை மக்கள் மத்தியில் விதைத்துவரும் ஒரு கட்சி என்பதில் சந்தேகம் வேண்டியதில்லை. அவர்கள் முன்னெடுத்துவரும் 13 எதிர்ப்பும் இந்திய எதிர்ப்பின் நீட்சிதான். மறுபுறம், அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருக்கும் பிரதான கட்சியான இலங்கை தமிழரசு கட்சியும், 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. தொடர்ந்தும் சமஸ்டியை, உச்சரித்துக் கொண்டிருப்பதுடன், புதிய அரசியல் யாப்பு தொடர்பிலும் பேசிவருகின்றது. ஆனால் அவ்வாறானதொரு புதிய அரசியல் யாப்பினை கொண்டுவருவதற்கான சூழல் நாட்டில் இல்லை. பொருளாதார நெருக்கடியை ஒரு சாதகமான விடயமாக பலரும் சுட்டிக்காட்டினாலும் கூட. 13வது திருத்தச்சட்டத்தையே, அதிகமென்று வாதிடும் தென்னிலங்கை கடும்போக்கு தரப்புக்கள், 13இற்கும் அதிகமான விடயங்களை தமிழ் மக்களுக்கு வழங்குவதை எவ்வாறு ஆதிரிக்கும்? இதற்கு என்ன பதில்? புதிய அரசியல் யாப்பு தொடர்பில் வாதிடுபவர்கள் எவரிடமும் இந்தக் கேள்விக்கான தெளிவான பதில் இல்லை. அவ்வாறாயின் 13இற்கும் குறைவான அதிகாரங்களை முன்வைக்கும் யாப்பாகவே அது இருக்க முடியும்.

இந்த விடயங்கள் அனைத்தையும் நன்கு குறித்து வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவிற்கு செல்லும் போது, இந்த விடயங்களை அங்கு நிச்சயம் முன்வைப்பார். அதாவது, 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதில் தான் அக்கறையுடன் இருந்தாலும் கூட, அதற்கு இரண்டு பக்கத்திலும் தடைகள் இருப்பதாக அவர் குறிப்பிடுவார். இந்த நிலையில் விடயங்களை படிப்படியாகத் தான் செய்ய முடியுமென்று வாதிடுவார். இவ்வாறானதொரு பின்புலத்தில், தமிழ் கட்சிகள் ஓரணியாக என்ன செய்ய வேண்டும்?

13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் நாம் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றோம், பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்தின் போது சுட்டிக்காட்டிய, ஒத்துழைப்புடன் கூடிய சமஸ்டிதான் எங்களின் நிலைப்பாடு, எனினும், 13வது திருத்தச்சட்டதை முழுமையாக அமுல்படுத்துவதையே இன்றைய சூழலில் ஒரேயொரு சாத்தியமான தீர்வாக நாங்கள் கருதுகின்றோம். இதற்காக இந்தியாவின் ஆதரவை வலுவாக கோருவதுடன், ரணில் விக்கிரமசிங்க கூறியது போன்று, 13வது திருத்தச்சட்டத்தை அவர் முழுமையாக அமுல்படுத்த வேண்டும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான, 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில், இந்தியா ஒரு மூன்றாம்தரப்பு மேற்பார்வையாளராக செயலாற்ற வேண்டும். இந்தியா பங்குபற்றும் மூன்றாம் தரப்பொன்றே இலங்கைக்கு பயன்படும். வேறு எந்த நாடுகளது பங்களிப்பும் இந்த விடயத்தில் பயன்படாது. இதனையே தமிழ் மக்கள் கோருகின்றார்கள். இதுவே கட்சிகளின் ஒன்றுபட்ட உறுதியான நிலைப்பாடாகும். மோடிக்கு எழுதவுள்ள கடிதத்தில் இந்த விடயங்களை குறிப்பிட வேண்டும். தமிழ் கட்சிகள் தொடர்ந்தும் மதில் மேல் பூனை நிலைப்பாட்டை முன்வப்பதன் மூலம் இந்தியாவின் ஆதரவை கோர முடியாது. தமிழ் கட்சிகளை ஒன்றாக வாருங்கள் என்னும் ரணிலின் அழைப்பிற்கு, இவ்வாறுதான் தமிழ் கட்சிகள் பதிலளிக்க வேண்டும்.

# திருபழுகாமம் கலாசார மண்டபத்தில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை



மட்டக்களப்பு, ஜுலை 06

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கு அமைய கிழக்கு மாகாண சுகாதார மற்றும் சமூக சேவை திணைக்களங்களின் சேவைகளை ஒன்றிணைத்து வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் அனுசரணையில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ராகுலநாயகி வழி நடத்தலில் நேற்று முன்தினம் திருபழுகாமம் கலாசார மண்டபத்தில் நடமாடும் சேவை நடைபெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச செயலக சமூக சேவை பிரிவுக்கான சேவைகள், காணி, பதிவாளர், தேசிய அடையாள அட்டை மற்றும் சமுர்த்தி போன்ற பிரிவுகளுக்கான சேவைகள் உட்பட வலது குறைந்தவர்களுக்கான சேவை, முதியோர்களுக்கான சேவை, மூக்குக்கண்ணாடி சேவை, ஆயுர்வேத மருத்துவ சேவை, உளநல மருத்துவ சேவைகள், பற்சிகிச்சை முகாம் போன்ற சேவைகள் இடம்பெற்றதுடன், போரதீவுப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் உடல் திணிவு சுட்டெண், நீரிழிவு பரிசோதனைளும் இடம்பெற்றன.

இதில் பங்குபற்றியோருக்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்டது.

நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் துலஞ்சனன், போரதீவுப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், போரதீவுப்பற்று சமுர்த்தி தலைமையக முகாமையாளர், என பலர் கலந்துகொண்டனர்.

(அ)

# இரு இலங்கையர் பலி!

கொழும்பு, ஜுலை 06

மக்காவுக்கான புனித ஹஜ் யாத்திரையை மேற்கொண்டிருந்த இலங்கையர்கள் இருவர் உயிரிழந்தனர்.

கொலன்னாவையை சேர்ந்த பெண் ஒருவர் மாரடைப்பு காரணமாக, நேற்றைய தினம் உயிரிழந்ததாக, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேநேரம், கொழும்பு 14 ஐ சேர்ந்த ஆண் ஒருவர், மதீனா நகரில் இடம்பெற்ற விபத்தொன்றில் உயிரிழந்தார் என்று அந்த திணைக்களம் கூறியுள்ளது.

(அ)

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த தமிழ் மாணவனுக்கு கௌரவிப்பு!



மட்டக்களப்பு, ஜுலை 06

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியை சேர்ந்த தவேந்திரன் மதுஷிகன் இளம் வயதில் பாக்கு நீரினையை நீந்தி சாதனை படைத்துள்ளார்.

இந்த முயற்சிக்கு 231 ஆவது இராணுவ படைப்பிரிவினால் கல்லடி இராணுவ முகாமில் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

மதுஷிகனின் சாதனையை பாராட்டி மட்டக்களப்பு பாடும்மீன் கழகத்தின் தலைவர் புஸ்பாகரனினால் பணப்பரிசில் வழங்கப்பட்டது.

இராணுவ கட்டளைத் தளபதி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் இணைந்து நினைவுச் சின்னத்தை வழங்கி கௌரவமளித்துள்ளனர்.

இவர் தனது சாதனை நீச்சல் பயணத்தில் 30 கிலோமீற்றர் தூரமுடைய பாக்கு நீரிணையை சுமார் 12 மணித்தியாலம் 58 நிமிடங்களில் நீந்திக் கரை சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# வவுனியாவில் விடுதி சுற்றிவளைப்பு; நால்வர் கைது

வவுனியா, ஜுலை 06

வவுனியாவில் விருந்தினர் விடுதி ஒனறில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இளம் பெண் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ஏ-9 வீதி மூன்றுமுறிப்பு பகுதியில் விருந்தினர் விடுதியில் பாலியல் தொழில் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நீதிமன்ற அனுமதி பெற்று திடீர் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது, பாலியல் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் விடுதியில் தங்கியிருந்த 20, 34 வயதுடைய இரு பெண்களும், போதைப்பொருள் பாவித்திருந்தமையுடன் விபச்சாரத்துக்கு உடந்தையாக செயல்பட்டனர் எனும் குற்றச்சாட்டில் இரு ஆண்களுமாக நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரின் மருத்துவ அறிக்கைகள் பெறப்படவுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ஐ)






# மாளிகைக்காட்டில் கடலரிப்பைத் தடுக்க பைசல் காசீம் எம்.பி அதிரடி நடவடிக்கை!

காரைதீவு, ஜூலை 06

**காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட மாளிகைக்காடு கிராமத்தில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பை தடுக்க அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீமினால் அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**



மாளிகைக்காட்டில் ஏற்பட்ட கடலரிப்பின் காரணமாக கடற்கரை மிக வேகமாக பாதிக்கப்பட்டு அண்மித்த கட்டடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுவிடயமாக மீனவர் அமைப்புக்கள் மற்றும் மாளிகைக்காடு கிழக்கு வட்டார முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம். எச் நாஸர் ஆகியோர் அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீமின் கவனத்திற்கு கொண்டு வந்ததற்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் குறித்த இடத்துக்கு விஜயம் செய்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீமுடன் அம்பாறை மாவட்ட கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பொறியியலாளர் எம். துளசிதாஸன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், கல்முனை மாவட்ட கடற்றொழில் உதவி ஆணையாளர் எஸ். ஸ்ரீரஞ்சன் மற்றும் கரையோரப் பாதுகாப்பு வெளிக்கள உத்தியோகத்தர் காரைதீவு பிரதேசத்திற்குப் பொறுப்பான தஸ்தகீர், சாய்ந்தமருது பிரதேசத்திற்குப் பொறுப்பான நுஸ்றத் அலி ஆகியோரும் வருகை தந்தனர்.

உயர்மட்டக் குழுவினர் சேதமடைந்த இடங்களைப் பார்வையிட்டதும், மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம், ஜனாஸா நலன்புரி அமைப்பு, மொத்த மீன் வியாபார வர்த்தக சங்கம், ஆழ்கடல் மீன்பிடிச் சங்கம், சிறு படகு உரிமையாளர் சங்கம், ஆகியவற்றின் பிரதிநிகள் மற்றும் பொது மக்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பைசல் காசீமின் வேண்டுதலுக்கிணங்க முதற்கட்ட தற்காலிக ஏற்பாடாக லியோ பேக்கில் மண் நிரப்பி கரையோரத்தை அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கும் பின்னர் நிரந்தத் தீர்வொன்றை துரித கதியில் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த வேலை இன்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படும் எனவும் கரையோரப் பாதுகாப்பு திணைக்களப் பொறியியலாளர் எம். துளசிதாஸன் இங்கு குறிப்பிட்டார்.

(அ)



# முகத்துவாரத்தில் ஆற்றுவாய் வெட்டும் பணிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூலை 06

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, களுவாஞ்சிகுடி போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளிற்குட்பட்ட சுமார் 3000 ஏக்கர்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள அறுவடையை எட்டியுள்ள வயல் நிலங்கள் காட்டு வெள்ள நீர் நிரம்பி காணப்படுவதனால் மிகவும் பாதிக்கப்பட்டு அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை கருத்திற்கொண்ட மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்திச் சபை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் ஆகியவை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக மேற்கொண்ட கள விஜயத்தினை தொடர்ந்து மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியில் ஆற்றுவாய் வெட்டும் பணிகள் இடம்பெற்றன.

(அ)

# போதைப்பொருள்களுடன் பொத்துவிலில் 3 பேர் கைது!

அம்பாறை. ஜூலை 06

பொத்துவில் பொலிஸ் பிரிவிலுள்ள 3 பிரதேசத்தில் வெவ்வேறு சம்பவங்களில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் 3 பேரை விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று முன்தினம் காலை பொத்துவில் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் பொத்துவில் நகர பகுதியில் 26 வயதுடைய ஒருவரை 350 மில்லிக்கிராம் கஞ்சாவுடனும் சியம்பலாண்டுவ பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவரை 200 மில்லிகிராம் கஞ்சாவுடனும் கைது செய்தனர்.

அதேவேளை, அறுகம்பை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து உல்லை பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரை கைது செய்து ஒப்படைத்துள்ளதாகவும் இந்த வெவ்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 3 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# வீதியை செப்பனிடும் வேலைகள் ஆரம்பம்

திருமலை, ஜூலை 06

நாட்டின் பொருளாதாரப் பிரச்னை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கச்சக்கொட்டித்தீவு - மாகமாறு வீதி திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக் எம்.பியினால் எடுக்கப்பட்ட முயற்சியின் பயனாக மீண்டும் செப்பனிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(அ)

# கடை உடைத்து திருட்டு

மட்டக்களப்பு, ஜூலை 06

மட்டக்களப்பு- களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பழுகாமம் பகுதியில் பூட்டியிருந்த பலசரக்கு கடையொன்று உடைக்கப்பட்டு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த கடையின் உரிமையாளார் கடையை பூட்டிவிட்டு கதிர்காம கந்தனை தரிசிக்கச் சென்றுள்ள நிலையில் கடையின் கதவு உடைக்கப்பட்டுள்ளதை அப்பதி மக்கள் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு சென்ற தடவியல் பிரிவு பொலிஸார், பணம் வைத்துள்ள பெட்டி உடைக்கப்பட்டு அங்கு பணம் திருட்டுப் போயுள்ளதாகவும் கடை உரிமையாளரை தொடர்பு கொண்டபோது கதிர்காமத்தில் இருப்பதாகவும், அவர் திரும்பி வந்த பின்னரே ஏனைய பொருட்கள் திருட்டு போயுள்ளதா எனக் கண்டறிய முடியும் எனவும் தெரிவித்தனர்.

(அ)

# மகளிர் உதைபந்தாட்ட போட்டியில் பாரி வித்தியாலய அணி சம்பியன்!

மட்டக்களப்பு, ஜூலை 06

மட்டக்களப்பு மாவட்டத்தில் மகளிர் உதைப் பந்தாட்ட அணிகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வு கடந்த 2 ஆம் திகதி மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

வேல்முருகன் டிஸ்ரிபியூட்டர்ஸ் ஸ்தாபனத்தினரின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் 4 கல்வி வலயங்களில் இருந்து 16 பாடசாலைகள் கலந்துகொண்ட உதைப் பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இரண்டு நாட்களாக இடம் பெற்றன.

16 பாடசாலை அணிகள் மோதிய இத்தொடரில் நகர்ப்புற தேசியப் பாடசாலைகளுடன் போட்டியிட்டு பலத்த போட்டியின் மத்தியில் 03:00 என்ற கோல் வித்தியாசத்தில் முதலாவது இடத்தை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு உட்பட பன்சேனை பாரி வித்தியாலய அணியினர் பெற்று வெற்றிக் கிண்ணத்தை தம்வசப்படுத்தி கொண்டனர்.




முனைக்காடு விவேகானந்தா மகா வித்தியாலய அணியினர் இரண்டாவது இடத்தை பெற்றுக் கொண்டனர்.

இத்தொடரில் கலந்து கொண்ட அனைத்து அணிகளுக்கும் பத்தாயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத்தொடரின் சிறந்த தொடர் ஆட்டநாயகியாக எஸ்.ரூவனிதா, இறுதிப் போட்டியின் சிறந்த ஆட்டநாயகியாக பி.ரேணுஸ்கா மற்றும் இத்தொடரின் சிறந்த கோல் கீப்பர் ஆக ஆர்.பிரியதர்ஷனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இத்தொடரில் அதிகூடிய கோல்களை போட்ட கட்டுமுறிவு என்.நந்தினிக்கு திறமைக்கான அங்கீகாரமாக சைக்கிள் சிறப்பு பரிசாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வெளியேற தொடங்கின இஸ்ரேலியப் படைகள்!

ஜெருசலேம், ஜூலை 06

**ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ஜெனின் அகதிகள் முகாமில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறத் தொடங்கியுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.**

**இதன்மூலம், 12 பலஸ்தீனியர்கள் மற்றும் ஒரு இஸ்ரேலிய சிப்பாய் கொல்லப்பட்ட இரண்டு நாள் நடவடிக்கை முடிவுக்கு வருகிறது.**



முன்னதாக, பலஸ்தீனிய போராளிக் குழுக்கள் இஸ்ரேலில் காரால் மோதி மற்றும் கத்தியால் குத்தி நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேல் கூறியது.

டெல் அவிவில் பரபரப்பான வணிக தெருவில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் ஏழு பேர் காயமடைந்ததாகவும், தாக்கியவர் மேற்குக் கரையைச் சேர்ந்த பலஸ்தீனியர் என்றும் இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ கூறுகையில்-

பயங்கரவாதத்துக்கு எதிரான எங்கள் போராட்டத்தை தொடராமல் தடுக்கும் என யாரேனும் கருதினால் அது தவறு.

இஸ்ரேலியப் படைகள் ஜெனினில் பணியை முடிப்பதாக அவர் உறுதிப்படுத்தினார். ஆனால் அது ஒருமுறை நடவடிக்கையாக இருக்காது என்று எச்சரித்தார்.

பலஸ்தீன தலைவர்கள் இஸ்ரேல் ஒரு படையெடுப்பு செய்வதாக குற்றம் சாட்டினார்கள்.

இஸ்ரேலிய இராணுவம் திங்கட்கிழமை அதிகாலை ஜெனின் அகதிகள் முகாமில் தனது நடவடிக்கையை ஆளில்லா விமானத் தாக்குதலுடன் தொடங்கியது. இது ஜெனின் படையணிகளின் கூட்டு கட்டளை மையத்தை குறிவைத்ததாகக் கூறியது - இது ஹமாஸ் உட்பட பல்வேறு போராளிக் குழுக்களைக் கொண்ட ஒரு பிரிவு.

நூற்றுக்கணக்கான துருப்புக்கள் முகாமுக்குள் நுழைந்து அங்கு இருந்த ஆயுதம் ஏந்திய பலஸ்தீனியர்களுடன் தீவிர துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். ட்ரோன்கள் மேலும் வான்வழித் தாக்குதல்களை நடத்தின. (அ)

# பிரபல பெண் ஊடகவியலாளர் மீது ரஷ்யாவில் கொடூரமான தாக்குதல்!



மொஸ்கோ, ஜூலை 06

பிரபல பெண் ஊடகவியலாளர் ஒருவர் மர்ம நபர்களால் கொடூரமாகத் தாக்கப்படும் காணொலி ஒன்று இணையத்தில் வெளியாகி உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் செச்செனியா குடியரசில் இயங்கிவரும் நொவாயா கெசெட்டா எனப்படும் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த எலெனா மிலாஷினா என்பவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் அலெக்சாண்டர் நெமோவ் என்ற வழக்கறிஞருடன் நேற்றுக் காலை காரில் பயணம் மேற்கொண்டிருந்தபோதே அங்கு ஆயுதமேந்தி வந்த சில மர்ம நபர்கள் எலெனா மீது கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

இதன்போது மர்ம நபர்கள் மிலாஷினா மற்றும் நெமோவ் ஆகியோர் முகத்தில் கொடூரமாகத் தாக்கி, அவர்கள் மீது பச்சை நிறச் சாயத்தை வீசி, அவர்களது தலையில் மொட்டையடித்து, விரல்களை உடைத்து, தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டியுள்ளதோடு அவர்களது உபகரணங்களையும் அபகரித்து, அவற்றை அடித்து நொறுக்கியுள்ளனர்.

மேலும் இங்கிருந்து வெளியேறுங்கள். இனிமேல் எதுவும் எழுத வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், தாக்குதல் நடத்திய மர்மக் கும்பல் ரஷ்யாவில் தடை செய்யப்பட்ட மெமோறியல் எனும் ஓர் உரிமை குழு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து படுகாயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலுக்கு உலகளவில் பெரும் கண்டனங்கள் எழுந்துள்ளன. உடனடியாக இத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்தவேண்டும் எனவும் உலக நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மிலாஷினா செசன்யாவில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களை குறித்து பல வருடங்களாக எழுதிவரும் நிலையில் அவருக்கு பலமுறை உயிர் அச்சுறுத்தல்கள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆளில்லா விமான தாக்குதல்கள் அமெ. மீது ரஷ்யா குற்றச்சாட்டு

மொஸ்கோ, ஜூலை 06

அமெரிக்க மற்றும் நேட்டோ படையின் உதவியின்றி, ரஷ்ய பிராந்தியத்தில் உக்ரைன் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்துவது சாத்தியமற்றதாகும் என ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று முன்தினம், மொஸ்கோவுக்கு அருகில் நடத்தப்பட்ட ஐந்து ஆளில்லா விமானத் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, ரஷ்யா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

மேற்குலக நாடுகள், ஆளில்லா விமான தாக்குதல்களுக்கு பயிற்சி அளித்து, அத்தகைய குற்றங்களைச் செய்வதற்கு தேவையான புலனாய்வு ஒத்துழைப்பை வழற்குவதாக, ரஷ்ய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கார்கிவ்வின் கிழக்குப் பிராந்தியத்தில் ரஷ்யா நடத்திய தாக்குதலில், 12 சிறுவர்கள் உட்பட, 43 பேர் காயமடைந்துள்ளதாக, உக்ரைன் தெரிவித்துள்ளது. (அ)

# உக்ரைனில் ஏவுகணை தாக்குதல்: சிறுவர்கள் உட்பட 43 பேர் காயம்!

கீவ், ஜூலை 06

உக்ரைனின் கார்கிவ் பிராந்தியத்திலுள்ள குடியிருப்பு கட்டடமொன்றின் கார் தரிப்பிடத்தின் மீது நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் 12 சிறுவர்கள் உள்ளிட்ட குறைந்தது 43 பேர் காயமடைந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காயமடைந்தவர்களில் 10 மாதம் மற்றும் ஒரு வயதான இரு குழந்தைகள் அடங்குகின்றன என்று கூறப்படுகின்றது.

ரஷ்யாவின் ஏவுகணை தாக்குலாக இருக்கும் என நம்பப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான பகுதியில் குடியிருப்பு கட்டடங்கள் மாத்திரமே அமைந்துள்ளதாக உக்ரைன் சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளார்.

குடியிருப்பு கட்டடங்களை இலக்கு வைப்பது ரஷ்யாவின் மற்றுமொரு போர் குற்றம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தாக்குதலில் கட்டடங்கள் பல சேதமடைந்துள்ள மற்றும் புகை மண்டலம் மேலெழும் நிழற்படங்களை கார்கிவ் பிராந்திய ஆளுநர் சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார்.

ஏவுகணை தாக்குதலுக்கு இலக்கான நகருக்கு அருகிலுள்ள சுமார் அரைவாசி நகரங்கள் மக்கள் வசிக்க முடியாத நிலையிலுள்ளதாக பிராந்திய ஆளுநர் உள்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

# வகுப்பறைகளில் கைபேசிக்கு தடை



அம்ஸ்ரடாம், ஜூலை 06

நெதர்லாந்தில் வகுப்பறைகளில் கையடக்க தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், உள்ளிட்ட எண்மயக் கருவிகளின் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்படும் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

நெதர்லாந்தின் கல்வி அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாணவர்களின் கவனச் சிதறல் காரணமாகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், மருத்துவ காரணங்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கு மாத்திரம் கைபேசி உள்ளிட்ட எண்மயக் கருவிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படும் எனவும் நெதர்லாந்தின் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். (அ)

# நேட்டோ உச்சிமாநாடு 11 ஆம் திகதி ஆரம்பம்




வில்னியஸ், ஜூலை 06

எதிர்வரும் 11 ஆம்,12 ஆம் திகதிகளில் லித்துவேனியா தலைநகர் வில்னியசில் நேட்டோ உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

உலகின் மிகப்பெரிய இராணுவ கூட்டமைப்பான நேட்டோ 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் கொள்கையை அறிமுகப்படுத்தவும், புதிய உறுப்பினர்களை சேர்க்கவும் அவ்வப்போது நேட்டோ உச்சி மாநாடு நடத்தப்படுகிறது.

இதற்கமைய எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் லிதுவேனியா தலைநகர் வில்னியசில் நேட்டோ உச்சி மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில் உறுப்பு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொள்வதால் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் லிதுவேனியா உள்ளது. எனவே வருகிற 17ஆம் திகதி வரை அங்கு சிறப்பு படைகளை நிறுத்துவதற்கான ஒப்பந்தத்தில் போலந்து அதிபர் ஆண்ட்ரேஜ் டுடா கையெழுத்திட்டுள்ளார்.

இந்த சிறப்பு படைப்பிரிவில் 75-க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள், எம்.ஐ-17 ஹெலிகொப்டர்கள் உள்ளிட்டவை அடங்கும். இவை லிதுவேனியா வான்பாதுகாப்பை உறுதிசெய்வதோடு, பொதுமக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் என போலந்து அரசாங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(அ)



# ஆஷஷ் தொடரிலிருந்து விலகினார் ஒல்லி போப்

லண்டன், ஜூலை 06

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக இரு போட்டிகளிலும் தோல்வி அடைந்துள்ளது.

இதனால் தொடரில் 0-2 என அந்த அணி பின்தங்கி உள்ளது. இந்நிலையில் இங்கிலாந்து அணியின் உப அணித் தலைவரும் துடுப்பாட்ட வரிசையில் 3ஆவது வீரராகவும் களமிறங்கும் ஒல்லி போப் காயம் காரணமாக தொடரின் எஞ்சிய ஆட்டங்களில் இருந்து விலகி உள்ளார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டியில் களத்தடுப்பின்போது ஒல்லி போப்புக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. பரிசோதனையின் முடிவில் அவருக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுரை வழங்கி உள்ளதால் ஆஷஷ் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

# விம்பிள்டன் ரென்னிஸ் கோ காப் தோல்வி

லண்டன், ஜூலை 06

பலத்த எதிரப்பு நிலவிய போட்டியில் சக நாட்டு வீராங்கனையான சோபியாவிடம் கோ காப் தோல்வி கண்டார்.

கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் புகழ்மிக்க விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடக்கிறது.

தொடக்க நாள் போட்டியே இந்த தொடரின் பாரம்பரியத்தையும், மரபையும் பறைசாற்றுவதாக இருந்தது. மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் உலகத்தர வரிசையில் 7ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் கோ கோ காப், சக நாட்டை சேர்ந்த, சோபியா கெனினுடன் மோதிய ஆட்டம் சுவாரசியமாக இருந்தது.

வழக்கமாக கால் இறுதிக்கு முந்தைய ஆட்டத்தில் இருந்துதான் கிராண்ட்ஸ்லாம் போட்டிகள் ரசிகர்களுக்கு விருந்து படைக்கும். பேஸ் லைன் ஆட்டம், வலைக்கு அருகே வந்து விளையாடுவது, லாங் ரேலிகள், கண்ணை பறிக்கும்



ஏஸ்கள் என அதகளப்படும். இவற்றில் பெரும்பாலானவற்றை கோ கோ காப்சோபியா கெனின் மோதிய ஆட்டத்திலேயே காண முடிந்தது.

3 செற் வரை நீடித்த இந்த ஆட்டத்தில் கோகோ காப் 4-6, 6-4, 2-6 என்ற செற் கணக்கில் தோல்வி அடைந்தார். 123 நிமிடங்கள் நடைபெற்ற இந்த போராட்டத்தில் 128ஆம் நிலை வீராங்கனையான சோபியாவிடம் வீழ்ந்தார் கோ கோ காப்.

(ஐ)

# ஒருநாள் உலகக்கிண்ண தகுதி சிம்பாப்வே அணி வெளியேறியது



புலவாயோ, ஜூலை 06

ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச்சுற்றில், சிம்பாப்வே தனது கடைசி ஆட்டத்தில் 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஸ்கொட்லாந்திடம் செவ்வாய்க்கிழமை தோற்றது.

இதையடுத்து உலகக் கிண்ண போட்டிக்கு தகுதிபெறும் வாய்ப்பை அந்த அணி இழந்துள்ளது.

சுப்பர் - சிக்ஸ் அட்டவணையில் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகளே உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதிபெறும் நிலையில், அந்த அணி 6 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது. தற்போதைய நிலையில் இலங்கை 8 புள்ளிகளுடன் முதலிடத்தை உறுதி செய்திருக்க, 6 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ள ஸ்கொட்லாந்தும் அந்த இடத்தை தக்க வைத்துக் கொள்ளும் எனத் தெரிகிறது.

முன்னதாக,சிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் முதலில் ஸ்கொட்லாந்து 50 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 234 ஓட்டங்கள் சேர்க்க சிம்பாப்வே 41.1 ஓவர்களில் 203 ஓட்டங்களுக்கே 10 விக்கெட்களையும் இழந்தது.

இதனிடையே, 7ஆவது இடத்துக்கான பிளே-ஓவ் ஆட்டத்தில் அயர்லாந்து 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நேபாளத்தை சாய்த்தது. (ஐ)

# பெடரரை தலைவா என விளித்த விம்பிள்டன் ரென்னிஸ் நிர்வாகம்!

லண்டன், ஜூலை 06

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரர் தொடர்ந்து 302 வாரங்கள் உலகின் முதல்நிலை ரென்னிஸ் வீரராக இருந்தவர். ஆடவர் ஒற்றையர் பிரிவில் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் 8 முறை விம்பிள்டன் கிண்ணத்தையும் வென்றிருக்கிறார்.

மேலும், உலகின் பல முன்னணி போட்டிகளிலும் கலந்துகொண்டு வெற்றிகளை குவித்து பெரும் கவனத் தைப் பெற்றவர்.

சர்வதேச ரென்னிஸ் விளையாட்டின் ஜாம்பவானான ரோஜர் பெடரர் சமீபத்தில் அனைத்து வகையான ரென்னிஸ் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று



'விம்பிள்டன்' போட்டி நடைபெற்ற இடத்திற்கு குடும்பத்துடன் ரோஜர் பெடரர் வந்திருந்தார்.

இதைப் பாராட்டும் விதமாக பல்வேறு பதிவுகளைப் பதிவிட்ட விம்பிள்டன் நிர்வாகம் தன் முகநூல் பக்கத்தில், 'தலைவா' என தமிழ் வார்த்தையைக் குறிப்பிட்டு ரோஜரின் படத்தையும் இணைத்துள்ளனர். இதனை, தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

(ஐ)




# இந்திய தெரிவு குழு தலைவராக அஜித் அகர்கர் நியமிக்கப்பட்டார்

மும்பை, ஜூலை 06

இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழு தலைவராக முன்னாள் இந்திய பந்து வீச்சாளர் அஜித் அகர்கரை நியமித்துள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை. இந்த பதவி கடந்த சில மாதங்களாக வெறுமையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மூன்று பேர் கொண்ட கிரிக்கெட் ஆலோசனைக் குழு அகர்கரை நேர்காணல் செய்து, அவரை இந்த பொறுப்பில் நியமிக்கலாம் என பரிந்துரை செய்தது. அதன் பேரில் தற்போது அவர் தெரிவுக்குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மூத்த வீரர் என்ற அடிப்படையில் அவர் இந்த பொறுப்பில் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இந்தப் பொறுப்புக்கு நான்கு பேர் விண்ணப்பித்திருந்தாக தெரிகிறது. இந்திய ஆடவர் கிரிக்கெட் அணி, ஆசிய கிண்ண மற்றும் ஒருநாள் உலகக் கோப்பை தொடரில் விரைவில் விளையாட உள்ளது.

45 வயதான அகர்கர் இந்திய அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் 1998 முதல் 2007 வரை விளையாடி உள்ளார். 26 டெஸ்ட், 191 ஒருநாள் மற்றும் 4 இருபது -20 போட்டிகளில் விளையாடி உள்ளார். இது மட்டுமல்லாது 110 முதல்தர மற்றும் 270 லிஸ்ட் ஏ போட்டிகளிலும் விளையாடி உள்ளார். உள்ளூர் கிரிக்கெட்டில் மும்பை அணிக்காக விளையாடியவர். 1999, 2003 மற்றும் 2007 ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடியுள்ளார். 2002 சம்பியன்ஸ் டிராபி மற்றும் 2007 இருபது -20 உலகக் கிண்ணத்தில் சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியில் அங்கம் வகித்தவர்.

# சூழ்ச்சி மூலம் இந்த அரசை யாரும் கவிழ்க்க முடியாது!

## மொட்டு கட்சி எம்.பி. சூளுரை

**கொழும்பு, ஜுலை 06**

**சூழ்ச்சித் திட்டங்கள்மூலம் தற்போதைய அரசை கவிழ்க்க முடியாது என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், எந்த தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன கட்சி தயார் எனவும் அவர் கூறினார்.

அரசியல் சூழ்ச்சி மூலம் இந்த அரசை கவிழ்க்க முடியாது என்பதால், அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு எதிரணிகள் முன்வரவேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார். (அ)



# விபத்துகள் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு!

*கொழும்பு, ஜுலை 06*

இலங்கையில் ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்துக்கும் ஒருமுறை, விபத்துகள் காரணமாக, நான்கு பேர் வரையில் மரணிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ வேலைத் திட்டத்தின் முகாமையாளர் விசேட வைத்தியர் சமித சிறிதுங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அதாவது நாளொன்றுக்கு 32 முதல் 35 பேர்வரையில், விபத்துகளால் மரணிக்கின்றனர்.

வாகன விபத்துகள், தற்கொலைகள், நீரில் மூழ்குதல், வீழ்தல் மற்றும் மின்சாரத் தாக்கத்திற்கு இலக்காகுதல் உள்ளிட்ட காரணிகளால் குறித்த மரணங்கள் சம்பவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இது மிகவும் மோசமான நிலைமையாகும். எனவே, இதனைத் தடுப்பதற்கு பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுவதே அவசியமாகும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நாட்டில் சீரற்ற வானிலை சில தினங்கள் நீடிக்கும்

*கொழும்பு, ஜுலை 06*

நாட்டின் தென்மேற்கு பகுதியில் நிலவும் சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்கு நீடிக்கும் சாத்தியமுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்வதற்கான சாத்தியமுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் ஆங்காங்கே 150 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியமுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மேல் மாகாணத்திலும் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை பெய்யும் சாத்தியமுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 8 வருடங்கள் கழித்து கருவுற்ற கர்ப்பிணித் தாய் உயிரிழப்பு!

*கொழும்பு, ஜுலை 06*

கர்ப்பிணித் தாய் ஒருவர் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுக்கத் தயாராக இருந்த நிலையில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான 36 வயதான லவந்தி சதுரி ஜயசூரிய என்ற கர்ப்பிணித் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திருமணமாகி எட்டு வருடங்கள் கழித்து குழந்தை இல்லாததால் குழந்தை பெற்றுக்கொள்ளும் ஆசையில் இருந்ததாக அவரது கணவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவரது கணவர் அமில சமரவீர மேலும் தெரிவித்துள்ளதாவது:

குழந்தை கருத்தரித்ததால், நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றின் விசேட வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய கடந்த 28 ஆம் திகதி ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் 23 வாரங்கள் கருவுற்றிருந்தார். கடந்த 29 ஆம் திகதி இரவு அவர் சிரமப்பட்டார். 30 ஆம் திகதி காலை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இரண்டாவது நாள் மதியம், மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் அலட்சியத்தால் இந்த துயரச் சம்பவம் நடந்துள்ளது. இது தொடர்பில் முறைப்பாடு செய்ய உள்ளேன் -என்றார்.

தாய் மற்றும் மூன்று பிள்ளைகளின் இறுதிச் சடங்குகள் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றன.

இந்த சம்பவம் தொடர்பில் ராகம போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரணவீர கருத்து தெரிவிக்கையில்,

கருவில் இருந்த குழந்தைகளும் தாயும் உயிரிழந்தமைக்கு வைத்தியசாலை பொறுப்பல்ல.

உயிரிழந்த பெண்ணுக்கு பல வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்த நிலையில், குழாய் மூலம் பிரசவத்திற்காக கருப்பையில் கருமுட்டை பொருத்தி தனியார் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சிகிச்சைகள் அரச வைத்தியசாலைகளில் செய்யப்படுவதில்லை. இவற்றை தனியார் வைத்தியசாலைகள் பல லட்சம் ரூபாய் செலவழித்து செய்கின்றன.

இதன்போது பல கருமுட்டைகளை பொருத்துகிறார்கள். குறைந்தபட்சம் ஒரு முட்டையாவது நன்றாகப் போகும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது.

எனினும், இந்த தாய்க்கு மூன்று முட்டைகளும் கருவுற்றிருந்தன. எவ்வாறாயினும், சுமார் இருபது வாரங்களில், அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு ராகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த தாயையும் அவரது இரண்டு குழந்தைகளையும் காப்பாற்ற வைத்தியசாலையின் ஊழியர்கள் கடுமையாக உழைத்தனர்-என்றார். (அ)

# சபாநாயகர் மஹிந்த யாப்பா உடனே பதவி விலகவேண்டும்

## பிரதான எதிர்க்கட்சி வலியுறுத்து

*கொழும்பு, ஜுலை 06*

அரசுக்கு சார்பாக செயற்படும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உடனடியாக பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான வாக்கெடுப்பின்போது எதிரணியின் கோரிக்கையை ஏற்காது, சபாநாயகர் ஏதேச்சாதிகாரமாக செயற்பட்டார் எனவும், இரவு 9.30 மணிக்கு நடத்தவேண்டிய விவாதத்தை 7.30 மணிக்கு நடத்தினார் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டினார். (அ)

# ரயில்வே திணைக்களம் விரைவில் மறுசீரமைப்பு

*கொழும்பு, ஜுலை 06*

ரயில்வே திணைக்களத்தை மறுசீரமைப்பது தொடர்பான யோசனை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

ரயில்வே துறையின் நட்டத்தை குறைத்தல் மற்றும் பயணிகளுக்கு செயற்றிறன் மிக்க சேவையை வழங்குதல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் எம்.எம். பி.கே. மாயாதுன்னே குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, ரயில்வே திணைக்களத்தின் சில சேவைகளை தனியார் கூட்டு முயற்சியுடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் திணைக்களத்தின் தொழிற்சங்க பிரதிநிதிகளின் கருத்துகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும். எம். பி.கே.மாயாதுன்னே கூறினார்.

ரயில்வே திணைக்களத்தை மறுசீரமைப்பதனூடாக, திறைசேரியிலிருந்து திணைக்களத்திற்காக வருடாந்தம் செலவிடப்படும் நிதியை சேமிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா இராணுவ முகாம் முன் தீக்குளிப்பதற்கு முயன்றார் தாய்

*வவுனியா, ஜுலை 06*

வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள வன்னி இராணுவத் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயன்ற நிலையில் வவுனியா பொலிஸாரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குருநாகல் வரக்காபொல பகுதியில் வசித்து வரும் 34 வயதுடைய குறித்த பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு பிள்ளைகளையும் தந்தை அழைத்துச் சென்றுள்ள நிலையில் இவர்கள் சில மாதங்களாக பிரிந்து வாழ்கின்றனர்.

குறித்த இரண்டு பிள்ளைகளின் தாயாருக்கும் வன்னி இராணுவ தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் குடும்பஸ்தரான இராணுவ சிப்பாய் ஒருவருக்கு மிடையில் தொடர்பு ஏற்பட்டுள்ளது. எனினும் சில வாரங்களாக குறித்த இராணுவ சிப்பாயின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் விரக்தியடைந்த குறித்த குடும்பப் பெண் அவரை தேடி வன்னி இராணுவத் தலைமை அலுவலகத்துக்குச் சென்ற போதிலும் குறித்த இராணுவச் சிப்பாயைச் சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்த பெண் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக தீக்குளிக்க முற்பட்ட சமயத்தில் வவுனியா பொலிஸாரினால் காப்பாற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

குறித்த பெண்ணுக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

## மத சுதந்திரத்...

மாறிக்கொண்டிருக்கிறோம். பணத்துக்கு முன்னுரிமை அளிக்கும் சூழலில், இன, மத அடிப்படையில் மோதல்கள் ஏற்படும். போதைப்பொருள் பிரச்னையும் தலைதூக்குகிறது. சிலர் மத சுதந்திரம் என்ற போர்வையில் ஏனைய மதங்களை விமர்சிக்கிறார்கள். மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் ஒடுக்கவும், மத நல்லிணக்கத்தை அச்சுறுத்தவும் யாருக்கும் உரிமை இல்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க புதிய சட்டமொன்றை கொண்டுவர எதிர்பார்க்கிறோம். எந்த மதத்தையும் இழிவுபடுத்தாத வகையில் அதற்கான சட்ட வரைபை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தொல்பொருட்கள் விவகாரத்தில் தொல்பொருட்கள் ஆணையை மீறி யாரும் செயல்பட முடியாது. எனவே தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சட்டத்தை அமுல்படுத்த எதிர்பார்க்கிறோம். தொல்பொருள் கட்டளைச் சட்டத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை, தற்பொழுதுள்ள தொல்பொருட்கள் கட்டளைச் சட்டம் அமுலில் இருக்கும்.

ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடும் அல்லது சாசனத்தை அவமதிக்கும் வகையில் செயல்படும் பிக்குமார்கள் தொடர்பில் மகாசங்கத்தினர் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

## 3இல் ஒரு பங்கு...

இதனையிட்டு வெட்கமடைய வேண்டும் என்றும் அவர் கூறினார் நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளதை நியாயப்படுத்த முடியாது. சனத்தொகையில் 10 இலட்சம் பேருக்கு 18 நீதிபதிகள் இருப்பது சிறந்த சூழலல்ல. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 174 நீதிமன்றங்களை நிறுவுமாறு பல்வேறு தரப்பினர் வலியுறுத்தினார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் புதிய நீதிமன்றங்கள் மற்றும் நீதிமன்ற கட்டடத் தொகுதிகளை ஸ்தாபிப்பது சாத்தியமற்றதானது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் புதிதாக 30 நீதிமன்றங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு அமைய உயர்நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் 5 ஆயிரத்து 482 வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஆகவே, ஒரு நீதியரசர் சுமார் 322 வழக்கு விசாரணைகளை நிறைவு செய்ய வேண்டும்.

நாட்டில் 10 மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் உள்ளன. 20 நீதிபதிகள் சேவையில் உள்ளார்கள். 2022 ஆம் ஆண்டு தரப்படுத்தலுக்கு அமைய மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் 3 ஆயிரத்து 423 வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஆகவே, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒரு நீதிபதி 171 வழக்கு விசாரணைகளை நிறைவு செய்ய வேண்டும்.

22 சிவில் குற்றவியல் நீதிமன்றங்களில் 6 ஆயிரத்து 800 வழக்குகளும், குற்றவியல் மேல் நீதிமன்றத்தில் 29 ஆயிரத்து 723 வழக்குகளும், மாவட்ட நீதிமன்றங்களில் 2 இலட்சத்து 63 ஆயிரத்து 481 வழக்குகளும், நீதிவான் நீதிமன்றங்களில் 8 இலட்சத்து 3 ஆயிரத்து 642 வழக்குகளும் சிறுவர் நீதிமன்றில் ஆயிரத்து 108 வழக்குகளும் தொழில் நியாய சபைகளில் 5ஆயிரத்து 225 வழக்குகளும் நிலுவையில் உள்ளன ஆகவே ஒட்டுமொத்தமாக 11 இலட்சத்து 27 ஆயிரத்து 265 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

உயர்நீதிமன்றம் முதல் நீதிவான் நீதிமன்றங்கள் வரை 399 நீதிபதிகள் மாத்திரமே சேவையில் உள்ளார்கள். குற்றவியல் மேல் நீதிமன்றங்களில் 5 ஆயிரத்து 550 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளும் 4 ஆயிரத்து 312 பெண் துஷ்பிரயோக வழக்குகளும் நிலுவையில் உள்ளதையிட்டு இலங்கையர் என்ற ரீதியில் வெட்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## இடைநிறுத்தப்...

ஸ்திரத்தன்மை அடைந்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை விரிவான கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் கலந்துரையாடி வருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். (அ)

## பெற்றோர் முன்...

புகுந்து கூரிய ஆயுதத்தால் யுவதியைச் சரமாரியாக வெட்டி விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

கொலையாளிகள் முகத்தை மூடிய தலைக்கவசத்தை அணிந்தவாறு வந்து இந்த வெறியாட்டத்தைப் புரிந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், யுவதியின் சடலத்தை மீட்டு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

காதல் விவகாரமே கொலைக்குக் காரணம் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த யுவதி அத்தனகல்லை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடந்த மூன்று வருடங்களாகக் காதலித்து வந்தார் என்றும், தனது பெற்றோரின் எதிர்ப்பையடுத்து கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு உறவினர் ஒருவரைத் திருமணம் செய்யச் சம்மதம் தெரிவித்திருந்தார் என்றும் பொலிஸாரின் மேலதிக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், யுவதியின் முன்னாள் காதலன் கூலிக்கு ஆட்களை அமர்த்தி இந்தப் படுகொலையைச் செய்திருக்கக் கூடும் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)

## தலைகீழாக...

ஒக்ரோபர் மற்றும் இந்த ஆண்டு பெப்ரவரியில் தற்போதைய அரசின் செயல்பாடுகளுக்கு மக்களின் ஒப்புதல் 10 சதவீதமாக இருந்தது, ஜூன் மாதத்தில் அது இரு மடங்காக அதிகரித்துள்ளது.

நாட்டில் நடைபெறும் பணிகள் குறித்த மக்களின் அங்கீகாரமும் அதிகரித்திருப்பது ஆய்வு முடிவு மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. கந்த ஒக்ரோபரில் 4 சதவீதமாக இருந்த மக்கள் அங்கீகாரம், கடந்த பெப்ரவரியில் 7 சதவீதமாக உயர்ந்து, ஜூன் மாதத்தில் நாட்டுப் பணிகள் நடைபெறுவதற்கான மக்களின் அங்கீகாரம் 12 சதவீதமாக உயர்ந்துள்ளது.

ஜூன் மாத முடிவுகளின்படி, நாட்டின் பொருளாதாரத்தின் மீதான மக்களின் நம்பிக்கை இன்னும் 43.8 என்ற எதிர்மறை மட்டத்தில் உள்ளது. ஆனால் கடந்த ஒக்ரோபர் மற்றும் பெப்ரவரி மாதங்களுடன் ஒப்பிடுகையில், இது தெளிவான வளர்ச்சி நிலை என்று ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் கோலப் இன்ஸ்டிட்யூட் நாட்டின் பொதுக் கருத்தைக் கேட்பதற்கு பயன்படுத்தும் கேள்விகள் மற்றும் கணக்கீடுகளை, இலங்கைக்கு ஏற்றவாறு தயாரித்து இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. (அ)

# காலாவதி உணவு பொருள் விற்ற கடைகள் சங்கானையில் சிக்கின

யாழ்ப்பாணம், ஜூலை 06

காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் பலர் நேற்று சங்கானை, மூளாயில் சிக்கினர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு தெரிவித்துள்ளது.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் நேற்று புதன்கிழமை சங்கானை நகரம், மூளாயில் வர்த்தக நிலையங்கள்மீது திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த சோதனை நடவடிக்கையின் போது வர்த்தக நிலையங்கள் பலவற்றில் காலாவதியான பொருட்கள் பிடிபட்டன. இவற்றை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை மீளஅழைக்கும் பின்னணியில் 'காகம்'

## சபையில் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 06



பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஜயந்த கெட்டகொட, உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்களை மீள அழைப்பது தொடர்பான இரண்டு தனிநபர் சட்டமூலங்களை முன்வைத்தபோது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றுக் காலை எதிர்ப்பு தெரிவித்தனர்.

உள்ளூராட்சிச் சபை திருத்தச் சட்டமூலத்தையும் மாநகர சபை திருத்தச் சட்டமூலத்தையும் கெட்டகொட சமர்ப்பித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இது தொர்பில் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவேண்டும். ஆனால் அரசு பணம் இல்லை எனக் கூறி தள்ளி வைத்தது. இப்போது கெட்டகொடவின் கோரிக்கையின் பேரில் கலைக்கப்பட்ட சபைகளின் உறுப்பினர்களை மீண்டும் கொண்டு வர வேண்டும் என ஒரு முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. இது காகத்தின் முகவர்களால் செய்யப்படுகிறது. தேர்தலை நடத்தாமல் உள்ளூராட்சி உறுப்பினர்களை திரும்ப அழைக்கச் சொல்கிறது காக்கையின் பேய். என்ன ஒரு நகைச்சுவை.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தை நாட உள்ளோம்.

காகம் முடிந்துவிட்டது. இந்த நாட்டில் ஜனநாயகத்தை அழிக்க காக்கையின் பேய்கள் செயல்படுகின்றன- என்றார். (அ)

# சீனி நிறுவனத்திற்கு வன்னியில் காணி வழங்குவதற்கு விக்னேஸ்வரன் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 06

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய வன்னியில் உள்ள அரச காணி, தனியார் நிறுவனமொன்றுக்கு பணப்பயிரை பயிரிடுவதற்கு வழங்கப்படவுள்ளதாகவும் இது அப்பகுதி தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனவும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பிருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தானும் முன்னர் நிராகரித்த கரும்புச் செய்கை வன்னியில் செயல்படுத்தப் படவுள்ளதாகவும், கரும்புச் செய்கை அந்த நிலத்திற்கு பொருத்தமற்ற பயிர்ச் செய்கை எனவும் அவர் கூறினார்.

"நான் முதலமைச்சராக இருந்தபோது சீனித் தொழிற்சாலை தொடர்பான கோரிக்கையை நிராகரித்தேன். இது குறித்து விவசாய அமைச்சராக இருந்த ஐங்கரநேசன் ஆய்வு செய்தார்.

இதனால் இலாபத்தை விட நட்டம் ஏற்படும் என அவர்கள் தெரிவித்தமையால், இதுத் தொடர்பில் அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தி இந்த திட்டத்தை நான் நிறுத்தினேன்.

பாரிய நீர்ப் பிரச்னையை எதிர்நோக்கும் வன்னியில் கரும்புச் செய்கையால் அப்பகுதி பொது மக்களின் நீர்த்தேவைக்கு பாதிப்பு ஏற்படுமெனவும் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்த பயிர் எங்கள் நிலத்திற்கு ஏற்றதல்ல. கரும்புச் செய்கைக்கு அதிக தண்ணீர் தேவை. அதனால், நீர் இல்லாத பகுதியில் கரும்புச் செய்கையை மேற்கொள்ளும் போது, சாதாரண மக்களின் தண்ணீர் தேவைகளுக்கு சிக்கல் ஏற்படும்.

அதனைவிட மண்ணின் அனைத்து சக்திகளையும் கரும்பு உறிஞ்சுக் கொள்ளும். இதுபோன்ற பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. இதற்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விடுவிக்கப்படவுள்ளன." எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அரசியல் கைதி...

எனவே, இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுதான் அனைவரது கருத்தாகவும் உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரித்தானியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது, அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதாக உறுதியளித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகிவிட்டன. ஏனைய நாடுகளில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் கைதிகள் விடுவிக்கப்படும் நிலையில், இங்கு அநீதியானதொரு சட்டம்தான் அரசியல் கைதிகள் விவகாரத்தில் நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# சபாநாயகரின் அறிவிப்பால் சபையில் அமைதியின்மை!

கொழும்பு, ஜூலை 06

**அரசாங்க நிதி பற்றிய குழுவின் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரை அழைப்பது உகந்ததல்ல என சபாநாயகர் அறிவித்ததை அடுத்து, சபையில் அமைதியற்ற நிலை ஏற்பட்டது.**

கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுவின் கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்றிருந்ததாகவும், இதன்போது அவருக்கு கருத்து வெளியிட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் தமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற கூட்டங்களுக்கு, எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது குறிப்பிட்ட பொறுப்புவாய்ந்த நபர்களையோ அழைக்க நடவடிக்கை எடுப்பது உகந்ததல்ல என்று குறிப்பிட்ட சபாநாயகர், அந்தக் கூட்டத்தின் தகவல்களை எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்க குழுவின் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, அவ்வாறெனில், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கு விசேட இடம் இல்லை என்றா கூறுகின்றீர்கள் என சபாநாகரிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், அதிகாரிகளை தமது காரியாலயத்துக்கு அழைத்து வினவும் உரிமை எதிர்க்கட்சித் தலைவருக்கு உள்ளதாக குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அவ்வாறெனில், அனைத்து அரச அதிகாரிகளையும், அழைத்து விசாரிக்கும் உரிமை உள்ளது என்றா கூறுகின்றீர்கள் என சபாநாயகரிடம் பதில் கேள்வி தொடுத்தார். இதற்குப் பதிலளித்த சபாநாயகர், எந்தவொரு நேரத்திற்கும் அதிகாரிகளை அழைக்குமாறு குறிப்பிட்டார்.

பின்னர் மீண்டும் குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியினதோ, அரசாங்கத்தினதோ அல்லது அமைச்சர்களினதோ அழுத்தங்களின் பேரில் அவர்கள் சமுகமளிக்காமல் இருக்க முடியாது என்று குறிப்பிட்டதுடன், அவர்கள் சமுகமளிக்காவிட்டால், அது தமது சிறப்புரிமையை மீறும் செயலாகும் என்றும் கூறினார். (அ)

# 89,000 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதில் சிக்கல் நிலைமை

கொழும்பு, ஜூலை 06

உடவளவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதால், சுமார் 89 ஆயிரம் குடும்பங்களுக்கு, குடிதண்ணீரை விநியோகிப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மழையுடனான காலநிலை நீடிக்காவிட்டால், இன்னும் 10 நாட்களுக்கு மாத்திரமே விவசாயத்திற்கு நீரை வழங்க முடியும் என்றும் அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இரத்தினபுரி, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களின் விவசாய நடவடிக்கைகள் மற்றும் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் பிரதான நீர் ஆதாரமாக உடவளவ நீர்த்தேக்கம் உள்ளது. இதன்மூலம் குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் குடும்பங்களின் எண்ணிக்கை 89 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அத்துடன், சுமார் 25 ஆயிரத்து 300 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும், சுமார் 36 ஆயிரம் விவசாயக் குடும்பங்களுக்கு நீர் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உணவுகளை விலை குறைப்பு செய்யாத உணவகங்களின் படத்தை வெளியிடுக!

## கோருகின்றார் அசேல சம்பத்

கொழும்பு, ஜூலை 06

கொத்துரொட்டி மற்றும் பிரைட் ரைஸின் விலைகளைக் குறைக்காத உணவகங்களின் புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் வெளியிடுமாறு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஹோட்டல் துறைக்கு மின் கட்டணம் 27 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

மறுபுறம், 5 ஆயிரம் ரூபாயிற்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்ட சமையல் எரிவாயுவின் விலை, 2900 ரூபாய் அளவில் குறைக்கப்பட்டுள்ளது.



இதனால்தான் கொத்துரொட்டி மற்றும் பிரைட் ரைஸின் விலைகளை 10 வீதத்தால் குறைக்க நாம் தீர்மானித்துள்ளோம். இன்று (நேற்று) முதல் இது நடைமுறைப்படுத்தப் படும். எனவே, நுகர்வோர் இன்று (நேற்று) முதல் இந்த விலை குறைப்புடன் இவற்றை கொள்வனவு செய்ய முடியும்.

அதையும்மீறி, ஏதேனும் ஒரு ஹோட்டலில் பழைய விலையில் இவை விற்கப்பட்டால், அந்த ஹோட்டலின் புகைப்படத்தை சமூக ஊடகங்களில் பதிவிடுமாறும் நுகர்வோரிடத்தில் கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

# கொத்து ரொட்டி, பிரைட் ரைஸ் விலை 10 வீதத்தினால் குறைப்பு!

கொழும்பு, ஜூலை

கொத்து ரொட்டி மற்றும் பிரைட் ரைஸ் ஆகியனவற்றின் விலையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நூற்றுக்கு 10 வீதத்தால் விலையைக் குறைக்கவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

தற்போது கொத்து ரொட்டி 500 ரூபா முதல் 1300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் பிரைட் ரைஸ் 350 ரூபா முதல் 1900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

அதேநேரம் சாதம் 250 ரூபா முதல் 430 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும் பசும்பால் மற்றும் பால்மா கலவையுடனான தேநீர் மற்றும் தேநீர் ஆகியவற்றின் விலையில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையில் சினோபெக் நிறுவன எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்!

கொழும்பு, ஜூலை 06

இலங்கையில் சினோபெக் நிறுவனம் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதில் ஆர்வம் காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் சினோபெக் நிறுவனத்துக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, கொழும்பு துறைமுக நகரத்தில் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கு சைனா ஹார்பர் பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விருப்பம் தெரிவித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# யானை - மனித மோதலை தடுக்க தேசிய கொள்கை



கொழும்பு, ஜூலை 06

யானை - மனித மோதலை கட்டுப்படுத்துவதற்காக, தேசிய கொள்கையை தயாரிக்கும் பணி தொடங்கியுள்ளது.

வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் இதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், யானை - மனித மோதல் தொடர்பான ஜனாதிபதி செயலணி, நீர்ப்பாசனத் திணைக்களம், தொடருந்து திணைக்களம், விவசாய திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினர் உட்பட அனைத்து தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகள் இந்த செயலமர்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, வரலாற்றில் இதுபோன்ற தொரு கொள்கை தயாரிக்கப்படாமையால், யானை - மனித மோதல் தீவிரமடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அதற்காக, கொள்கை ரீதியான தீர்மானம் அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# அஸ்வெசும திட்டம் தொடர்பில் 5 இலட்சம் மேன்முறையீடுகள்

கொழும்பு, ஜூலை 06

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு திட்டம் தொடர்பில் இதுவரை 550000 இற்கும் அதிகமான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை விசாரணை செய்யும் நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் இதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வரை குறித்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு திட்டத்தினால் சமுர்த்தி கொடுப்பனவை இழந்த பல்வேறு தரப்பினர் நாட்டின் பல பகுதிகளில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (அ)

# ஜப்பானின் இலகு ரயில் போக்குவரத்து திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூலை 06

இலகு ரயில் போக்குவரத்து திட்டம் தொடர்பாக கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரக அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகத்துடன் மீண்டும் ஒருமுறை முன்மொழியப்பட்ட இலகு ரயில் திட்டத்தை செயற்படுத்தும் வகையில் பொருத்தமான காலக்கெடுவை தயாரிப்பதற்காக ஜனாதிபதியினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு இலகு ரயில் போக்குவரத்துத் திட்டம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் ஜப்பானிய அரசாங்கத்திடம் மன்னிப்புக் கோரியிருந்தார்.

ஜப்பானின் நிதியுதவியுடன் கூடிய இலகு ரயில் போக்குவரத்து திட்டத்தை நிறுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக தீர்மானித்தையடுத்து, இலங்கைக்கு 5,978 மில்லியன் இழப்பு ஏற்பட்டது.

கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிசலை குறைத்து, பயணிகளுக்கு சிறந்த பொது போக்குவரத்து வசதியை வழங்கும் நோக்கில் 2016 ஆம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.